விலை ரூபா: 8.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்:- பன்னிரண்டு

சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 சித்திரை 25 ஞாயிற்றுக்கிழமை (08.05.2005) தொலைபேசி 2223378, 2227644 ஒலி 140

புதுப் பொலிவுடன் திருநெல்வேலியில்

WESTERN UNION பணப் பரிமாற்றம்

விரைவானது பாதுகாப்பானது நம்பகமானது

இப்பொழுது உலகின் எப்பாகத்திலிருந்தும் மிக துரிதமாக பணத்தினை பெற்றுக்கொள்வதற்கு

- பணம் பெறுவதற்கு வங்கிக்குப் போகத் தேவையில்லை
- வங்கிக் கணக்கு அவசியமில்லை
- நீடிக்கப்பட்ட சேவை நேரம்
- 365 நாள் சேவை
- 10 (MTCN) இலக்கங்களைப் பெற்றவுடன் எம்மை நாடவும்

THIRUMURUGAN COM NET

T.P. 021 2227310
021 2227555
021 2227560
FAX 021 2227310
E-mail: thirumurugan@eudoramail.com

46, ஆடியபாதம் வீதி, (ப.நோ.கூ.ச. முன்பாக) திருநெல்வேலி யாழ்ப்பாணம்

# சிவராமின் கொலையைக் கண்டித்து யாழில் சவப்பெட்டி போராட்டம்

கடத்திச் செல்லப்பட்டு படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் மாமனிதர் சிவராமின் படுகொலையைக் கண்டித்து யாழ்ப்பாணத்தில் நேற்று சவப்பெட்டியுடன் அமைதியான ஆர்ப்பாட்டம் ஒன்று நடை பெற்றது.

வடஇலங்கைப் பத்திரிகையாளர் சங்கம் ஏற்பாடுசெய்த இந்த அமைதியான ஆர்ப் பாட்டம் நேற்றுக்காலை 10 மணியளவில் மனிதஉரிமை ஆணைக்குழுவின் யாழ்ப் பாண அலுவலகத்திற்கு முன்பாக நடை பெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் யாழ்ப்பாணத்தி லுள்ள பத்திரிகைகளின் செய்தியாளர்கள் மற்றும் வடஇலங்கைப் பத்திரிகையாளர் சங்கத்தின் உறுப்பினர்கள், யாழ். ஊடக வியலாளர் சங்கப் பிரதிநிதிகள் உட்படப் பலர் கலந்துகொண்டனர். ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட ஊடகவியலாளர்கள் சவப்பெட்டியை ஆணைக் குழுவின் அலுவல கத்திற்கு முன்பாக வைத்து ஊடகவியலா ளர் மாமனிதர்சிவராமின் உருவப்படத் துடன் அவரது படுகொலையைக் கண்டிக் கும் சுலோகஅட்டைகளையும் தாங்கியிருந்தனர்.





ஆர்ப்பாட்டத்தின் முடிவில் ஜனாதிபதிக்கு மகஜர் ஒன்றுமனிதஉரிமை ஆணைக்குழு வின் யாழ். மாவட்ட அலுவலக இணைப் பாளரிடம் வடஇலங்கைப் பத்திரிகையாளர் சங்கம் மற்றும் யாழ். ஊடகவியலாளர் சங் கத்தினால் கையளிக்கப்பட்டது.(இ.43,09,08)

# இரணைமடுவில் ஓடுபாதைத்தளம் புலிகளின் விமானம் குறித்து இந்தியா அவதானிக்கிறது

## மின் ஊழியர் சங்கம்; போராட்டம் ஒத்திவைப்பு

(கொழும்பு)

அரசாங்க அதிகாரிகளுக்கும் இலங்கை மின்சார சபை தொழிற்சங்கத்தலைவர்க ளுக்கும் இடையே நேற்று இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளை அடுத்து இலங்கை மின்சாரசபையின் ஊழியர்கள் தமது பணி நிறுத்தப்போராட்டத்தினை இடைநிறுத்தி உள்ளனர்.

அலரிமாளிகையில் இடம்பெற்ற பேச்சு வார்த்தைகளின்போது காரசாரமான பேச்சுக் கள் இடைக்கிடையே இடம்பெற்றுள்ளதாக இலங்கை மின்சாரசபையின் பொறியியலா ளர் சங்கத்தின் பிரதிநிதி நோயல்பிரியந்த தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், எப்படி இருந்த போதிலும் பிரதமர் மகிந்தராஜ பக்ஷவின் திறமையினாலும் அவரது இராஜ

(12ஆம் பக்கம் பார்க்க)

## வெளியுறவு அமைச்சர் நட்வர்சிங் பேட்டி

(கொழும்பு)

**தமிழீழ விடுதலைப்புலிகளிடம் காணப்படுகின்ற விமானங்கள் குறித்து இந்தியா கவனம்செலுத்திவருவதாக இந்திய வெளியுறவு அமைச்சர் நட்வர்சிங் தெரிவித்துள்ளார்.**

இந்தியாவில் இருந்து வெளியாகும் 'ஹிந்து' பத்திரிகைக்கு அளித்த பேட்டியிலேயே அமைச்சர் நட்வர்சிங் இதனைக்குறிப்பிட்டார். அப் பேட்டியில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,இலங்கையில் தமிழீழ விடுதலைப்புலிகள் விமான ஓடுபாதை ஒன்றைக் கட்டியுள்ளார்கள். விமானம் ஒன்றை வாங்கியுள்ளார்கள் என்ற செய்தி தொடர்பாக இந்தியா கவனம்செலுத்திவருகிறது.

இரு விமானங்களை விடுதலைப்புலிகள் வைத்துள்ளார்கள். ஓடுபாதையை அமைத்துள்ளார்கள். இன்னும் விமானங்களை அவர்கள்கொள்

(12 ஆம் பக்கம் பார்க்க)

உள்ளனர்.

அலரிமாளிகையில் இடம்பெற்ற பேச்சு

பக்ஷவின் திறமையினாலும் அவரது இராஜ

(12ஆம் பக்கம் பார்க்க)

இரு விமானங்களை விடுதலைப்புலிகள் வைத்துள்ளார்கள். ஓடுபாதையை அமைத்துள்ளார்கள். இன்னும் விமானங்களை அவர்கள்கொள்(12 ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கையில் அரசியல் யுத்தம் நடைபெறுகிறது

## அரசியல் துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன்

(மட்டக்களப்பு)

இன்று நாட்டில் அரசியல் யுத்தமே நடந்துகொண்டிருக்கிறது சமாதான சூழ் நிலையில் ஏற்படுகின்ற பிரச்சினைகளை சர்வதேச சமூகத்திற்கு எடுத்துரைக்க வேண்டிய நல்ல சூழ்நிலையினை எங்களது தலைவர் வே.பிரபாகரன் அவர்கள் தோற்றி வித்துள்ளார் என தமிழீழ அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு தரவையில் நடைபெற்ற ஜெயந்தன் படையணியின் 12-ம் ஆண்டு நிறைவு நிகழ்வில் கலந்துகொண்டு உரை யாற்றும் போதேஅவர் இதனைத்தெரிவித் தார். அவர் மேலும் பேசுகையில், யுத்த காலத்தில் தலைவர் எப்படி உழைத்தா ரோ அதேபோன்று தான் சமாதான காலப் பகுதியான இன்றும் இரவு பகல் பாராது அவர் உழைக்கின்றார்.

ஆனால் இன்று தென்னிலங்கையில் உள்ள சிங்களப்பேரினவாதம் சூழ்ச்சிகர மான சிந்தனையில் உள்ளது. சிங்களப் பேரின்வாதத்தின் உண்மை வடிவினை உலக நாடுகள் உணர்ந்திருக்கின்றன அத் துடன் எமது போராட்டத்தின் உண்மை நிலையினையும் வெகுவாக உணர்ந்துள் ளனர் எனத் தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் மரபுவழிப் படையணிகளின் ஒன்றான ஜெயந்தன் படையணி கடந்த 12ஆண்டுகளாக பல்வேறு சவால்களுக்கு முகம் கொடுத்து அவற்றை முறியடித்து தலை நிமிர்ந்து நிற்கிறது.

தமிழீழ விடுதலைப்போராட்டத்தில் வர லாற்றைப் படைத்துச்செல்லும் படையணி யில் ஒன்றாக ஜெயந்தன் படையணி திகழ் கிறது என்று தங்கன் மேலும் தெரிவித்தார்.(இ-4)

# மட்டக்களப்பில் நேற்று மீட்கப்பட்ட சடலம் விடுதலைப்புலிகளுடையது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் வடக்கு எல்லைப்பகு தியில் இருக்கும் ஓமடியாமடுவில் நேற்று முன்தினம் துப்பாக்கிச் சூட்டுக்காயங்க ளுடன் சடலங்களாக மீட்கப்பட்ட இரண்டு இளைஞர்களும் தமது அமைப்பைச்சேர்ந்தவர் கள் என விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர்.

தமது அமைப்பை சேர்ந்த லெப்டினனட் நிலவரசன் (இராசலிங்கம் சங்கர்) மற்றும் கப்டன் சுபன் எனப்படும் அரசரத்தினம் விக்னேஸ்வரன் ஆகியோர் கொல்லப்பட்டுள்ள னர் என விடுதலைப்புலிகளின் மட்டு. அம் பாறைமாவட்ட ஊடகப்பிரிவு விபரங்களை வெளியிட்டிருப்பதுடன் அரசியல் எதிரிக ளால் சுட்டுக்கொல்லப்பட்டவர்கள் அரசியல் போராளிகள் எனத்தெரிவித்துள்ளனர். வாழைச்சேனை வைத்தியசாலையின் சவச்சாலையில் நேற்று முன்தினம் இரவு பொலிஸாரால் ஒப்படைக்கப்பட இவர்களின் சடலங்களை பெற்றுக்கொள்ள அனைத் துலக செஞ்சிலுவைச்சங்கம் ஊடாக விடுத லைப்புலிகள் முயன்றதாக தெரிவிக் கப்படுகிறது.

ஆனால் மரணவிசாரணையின் பின்பு கப்டன் சுபன் என்பவரது சடலத்தை மட் டும் செஞ்சிலுவைசங்கத்தினர் புலிகள் பகு தியினின் கட்டுப்பாட்டு பகுதிக்கு கொண்டுசென்று விடுதலைப்புலிகளுடன் ஒப்படைத்துள்ளனர்.

லெப்டினனட் நிலவரசனின் சடலத்தை அவரது பெற்றோர்கள் அடையாளம் காட் டிப்பெற்றுக்கொண்டனர் இவர்களின் மரணம் தொடர்பான விசாரணைகளை மட்டக்களப்பு நீதிவான் எதிர்வரும் புதன்கிழமைக்கு ஒத்திவைத்துள்ளார். (இ-4)


SWISS
Mineral Water

Buy Swiss Mineral and win several lakhs worth of prices



Head office
Gbn, Posfach
8026 Zurich, Switzerland,
Tel.+41 243 82 59

Factory
231, Temple Road,
Nallur, Jaffna.
Tel.+94 77 312 69 63

சுவிஸ் மினறலின் யாழ்குடா நாட்டிற்கான ஏக விநியோகஸ்தர்கள் யாழ்மாவட்ட விவசாய நுகர்ச்சி கூட்டுறவு சங்கங்களின் சமாசம். தொலை பேசி : 0094 21 222 2662

# அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு

நிலத்தின் தன்மை கால்காட்டும், மரத்தின் தன்மை பழம்காட்டும், உளத்தின் தன்மை சொல்



காட்டும், படிப்பின் தன்மை பயன் காட்டும இப்படியே கூறிக் கொண்டு செல்லலாம். சீடன் குருவுக்கு மேற்பட்டவனல்ல. குருவின் பண்புகள் பல சீடரில் பிரதிபலிப்பதை நாம் காணலாம்.

இயேசுவும் தம் சீடர்கள் தம் பணியைத் தொடர்ந்து ஆற்ற வேண்டும் என்ற விருப்பம் கொண்டவராக "நீங்கள் போய் எல்லா மக்களினத் தாரையும் சீடராக்குங்கள். தந்தை, மகன் தூய ஆவியின் பெயரால் திருமுழுக்குக் கொடுங்கள். (மத் தேயு 28:19) உலகம் முடியுமட்டும் நான் உங்களுடனே கூட இருப்பேன் என்று அருளினார்.

எம்மிடம் எமது பொறுப்பான வர்கள் பொறுப்புகளை ஒப்படைத்து விட்டு நான் சென்று வரும் வரை நீங்கள் சரியான முறையில் நிர்வகித்துக் கொள்ளுங்கள் என்று கூறிச் சென்றால் நாம் பொறுப்புள்ளவர்களாக நடந்து கொள்ள வேண்டும். மாறாக எமது அதிகாரத்தனங்கள், துஷ்பிரயோகங்களை செயல்படுத்தினால் எம்மிடம் தரப்பட்ட பொறுப்புக்கள் எதிர் பார்த்த பலனைக் கொடுக்காது. எதிர்ப்புக்களையும், பலவீனங்களையுமே சந்திக்க நேரிடும்.

## பரமபிதா காட்டியபாதை

எனவே எமது செயல்கள் நேர்மையும், உண்மையும் உள்ளவையாய் இருக்கும்போது நாம் யாருக்கும் பயம்கொள்ளத்தேவையில்லை. "நீங்கள் என் சாட்சிகள் வாழ்வினில் காட்டுங்கள்" "என் தந்தை தம் அதிகாரத்தால் குறித்துவைத்துள்ள நேரங்களையும், காலங்களையும் அறிவது உங்களுக்கு உரியதல்ல" (திருத்தூதர் பணி 1:7,8) என்றுரைத்தார் இயேசு.

பாலுக்கும் காவல் பூனைக்கும் தோழனாக இருக்கமுடியாது. இரண்டு தலைவர்களுக்கும் ஊழியம் செய்ய இயலாது. ஒருவனைச் சார்ந்து மற்றவனைப் பகைக்கச் செயயும் ஆபத்து நிறைந்த செயலாகும். கிறிஸ்துவுக்கும் சாத்தானுக்கும் ஊழியம் செய்ய முடியாது. உலகத்தின் போக்கும் இறை ஆட்சியின் ஒன்று சேர இயலாது. இயேசுவின் உயிர்ப்புக்கு களங்கம் ஏற்படுத்த ஆளுநர்களும் மூப்பர்களும் பணம் கொடுத்து படைவீரருக்கு பொய் சொல்லும்படி கூறினார். படை வீரரும் அவ்வாறு செய்தனர்.

ஆனால இயேசுவின் உயிர்ப்பை அவர்களால் தடுக்க இயலாமற் போயிற்று. கடவுளின் திட்டப்படியே வாழ்வு செல்லும். கடவுளையே நாம் சார்ந்துள்ளோம்.

எங்கே புதுமைகள் நீடக்கின்றன. எங்கே அருங்குறிகள் நடக்கின்றன எனத்தேடும் காலமிது. விசுவாசத்தை இழந்துவிடாமல் விடாமுயற்சியுடன் இயேசு பாதையில் பயணிக்கவேண்டும். பொறுமையிலும் தாழ்ச்சியிலும் சிலுவையின் தியாகத்தைத் தேடுவதைவிட உயர்வானது ஒன்றுமில்லை.

### புனிதத்தைக் கடைப்பிடிப்போம்

புனிதம் என்பது இறைவனின் அன்புக்கு நம்மை முழுமையாகத் திறந்துவைப்பதே ஆகும் என்று தாமரிஸ் என்ற இறையியல் அறிஞன் கூறுகின்றான். இயேசுவின் அன்புக்கு சாட்சியாக விளங்க வேண்டியதே எமது கடமையும் பணியுமாகும்.

அன்பிலார் எல்லாந் தமக்குரியர்; அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு என்று வள்ளுவப் பெருந்தகை அன்புடையவர் பற்றி அறிமுகஞ் செய்கின்றார்.

"ஒரு மனிதனின் உயர்வு எதிர் முனைகளில் அல்ல. ஒரே நேரத்தில் அவற்றைத் தொடுவதில் தான் வெளிப்படுகின்றது" என்று பிளேஸ்பாஸ்கல் என்ற அறிஞன் குறிப்பிடுகின்றான்.

விண்ணேற்பு விழாவைக் கொண்டாடும் நாம் விண்ணுக்குரிய காரியங்களில் கருத்துள்ளவர்களாய் இருக்க வேண்டும் வெறுமனே

**அருள்தாசன் அமலன்**

மண்ணுக்குரியவற்றைச் செய்து கொண்டு நீதிமான்கள் வரிசையில் இடம்பிடிக்கமுடியாது.

மகிழ்ச்சி, பொருட்களில் அல்ல. அது நமக்குள் இருக்கின்றது. அகத்தின் மகிழ்ச்சியே அணையாத சுடரைப் போன்ற தியாகத்தின் வாசம் எல்லா நறுமணங்களையும் விட மேலானது. இறை பாதத்தை அலங்கரிக்கும் மலர்களுக்கே, அதிகம் மதிப்புண்டு. புனிதத்தைக் கடைப்பிடிப்போம். நாளும் புனிதவாழ்வில் வளருவோம். □

## வித்தியாரம்பமும் மாணவர் கௌரவிப்பும்

புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரியின் நிறுவுனரான அமரர் மழவராயர் கந்தையாவை நினைவு கூரும் வகையில் எதிர்வரும் புதன் கிழமை 11 ஆம்திகதி வித்தியாரம்ப தின விழாவும் மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வும் நடைபெறவுள்ளன.

கௌரவிப்பு நிகழ்வில் இவ்வருடம் பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவான ம.வதனகீர்த்தனா, த.அம்பிகா, சி.ஜீவனா, க.திருவேணி, பு.சுகன்ஜா, சி.சிவகௌரி, ந.கீர்த்திகா, சி.சிந்துஜா, இ.சிந்துஜா, ஸ்ரீ.சிவதாஸ், வி.கணேசன் ஆகிய மாணவர்கள் கல்லூரிச் சமூகத்தவர்களால் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர். (க-7)

## விண்ணப்பம் கோரல்

(சாவகச்சேரி)

சிறுவர் உரிமை மேம்பாட்டு உதவியாளர் பதவிகளுக்காக பட்டதாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படடுள்ளன. வெற்றிடமாகவுள்ள 51 பதவிகளில் நாற்பத்து நான்கு வடகிழககில் என்பதோடு இவற்றில்38 பதவிகள் தமிழ்மொழி மூலமான உதவியாளர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

உளவியல் சமூகவியல் குற்றவியல, குறறங்கள், நியாயங்கள் தொடர்பான சிறபபுப்பட்டம்பெற்றோர் அல்லது சமூகவியல பாடம்உட்பட பொதுப் பட்டம்பெற்றோரும் இதற்காக விண்ணப்பிக்கலாம்.

ஆட்சேர்ப்பு நேர்முகத்தேர்வு மூலமாக நடைபெறும் விண்ணப்பதாரி 18-45 வயதுக்கு இடைப்பட்டவராக இருபபதோடு அரச/மாகாண சேவையாளருக்கு வயதெல்லை ஏற்புடையதாகாது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பங்கள் எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன் கிடைக்கும் வகையில் ஆணையாளர், நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைச் திணைக்களம், 150 ஏ.எல்எச்பிகட்டடம் நாலவர் வீதி, நுகேகொடை எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். (ந-21)

## இராசி பலன்

**08.05.2005**
**(சித்திரை 25 , ஞாயிற்றுக்கிழமை)**
**அமாவாசை பிற்பகல் 2.32 மணிவரை**
**பரணி முன்னிரவு 7.33 மணிவரை**
**இராகுகாலம் 4.25 - 5.55 மணிவரை**
**சுபநேரம் 8.55 - 10.25 மணிவரை**
**அமாவாசை விரதம்**

| | |
|---|---|
| மேடம் | பெரியோர் சந்திப்பு, புதிய முயற்சி, தெய்வ சிந்தை, போசனசுகம். |
| இடபம் | காரிய அலைச்சல், பிரயாணம், தொழில் சிந்தை, பூர்வபுண்ணிய கருமம். |
| மிதுனம் | எடுத்தகருமங்கள் கைகூடும், பெருமையடைதல், போசனநன்மை, கலந்துரையாடல். |
| கடகம் | தொழில்சிந்தை, உறவினர் சந்திப்பு, புதிய தகவல், தெய்வதரிசனம். |
| சிங்கம் | புதிய திட்டமிடல், உடல்நலக்குறைவு, வாக்குமேன்மை, குடும்பநலம். |
| கன்னி | திருடர் பயம், பிரயாணத் தடங்கல், காரிய தாமதம், உறவினர் வெறுப்பு. |
| துலாம் | நல்ல வரவேற்பு, களஸ்திர நன்மை, தெய்வசிந்தை, உற்சாகம். |
| விருச்சிகம் | கௌரவமானநிலை, ஆரோக்கியம், எடுத்த காரியங்கள் கைகூடும், போசனசுகம். |
| தனுசு | புத்திரரால் கவலை, அபகீர்த்தி, ஆரோக்கியக்குறைவு, பணவிரயம். |
| மகரம் | மாதாசுகம், எதிர்பாராதநன்மை, தொழில் மந்தநிலை, மனப்பதற்றம். |
| கும்பம் | சுவாரஸ்யம், காரிய அனுகூலம், போசன சுகம், நண்பர்கள் சந்திப்பு. |
| மீனம் | சுபசெலவு, களஸ்திரநன்மை, வேலைச் சுமை, முயற்சி கைகூடும். |

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது

—வளவன்

## கசிப்பு உற்பத்தியைக் கட்டுப்படுத்த விழிப்புணர்வு நடவடிக்கை அவசியம்

(திருநெல்வேலி)

யாழ்.குடாநாட்டில் குறிப்பாக வடமராட்சிப் பகுதியில் அதிகரித்து வரும் கசிப்பு உற்பத்தியைக் கட்டுப்படுத்த கிராமிய மட்டங்களில் விழிப்புணர்வு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என வடமராட்சி பொது அமைப்புக்களின் ஒன்றியம் சுட்டிக்காட்டியுள்ளது.

குறிப்பாக கசிப்பு உற்பத்தியில் ஈடுபடுவோருக்கு மறுவாழ்வு அளிப்பதற்கான திட்டங்களை வகுத்து, அவற்றை நடைமுறைப்படுத்துவத்ன் மூலம் இதனைக் கட்டுப்படுத்த முடியுமெனவும்,

நீதிமன்றங்கள் சிலவற்றில் அதிகளவில் தண்டம் அறவிடப்படுவதால் மீண்டும் அவர்கள் கசிப்பு உற்பத்தியில் ஈடுபடத் தூண்டப்படுகிறார்கள் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதுடன் இத்தகைய செயற்பாடு வடமராட்சிப் பகுதியிலேயே அதிகம் உள்ளது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (க-43)

## இரு மாணவர் இல்லங்கள் மல்லாவியில் திறந்துவைப்பு

(மல்லாவி)

தங்களது கல்வியைத் தொடரமுடியாது மிகவும் பின்தங்கிய நிலையிலுள்ள மாணவர்களின் எதிர்கால நலன்கருதி இரு மாணவர் இல்லங்கள் தமிழர் புனர்வாழ்வுக்கழக அனுசரணையுடன் மல்லாவிப் பிரதேசத்தில் திறந்துவைக்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள யோகபுரம் மல்லாவி என்னும் இடத்தில் கடந்த புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் மாணவர்களுக்கான ஆண்கள் இல்லம் ஒன்றும் நண்பகல் 12.00 மணியளவில் மாணவிகளுக்கான பெண்கள் இல்லம் ஒன்றுமாக இரு இல்லங்கள் பிரான்ஸ் தமிழர் புனர்வாழ்வுக்கழகத் தொடர் நிதிப்பங்களிப்பின் கீழ் தமிழீழ மாணவர் அமைபபின் இளையோர் திறன்விருத்தி நிறுவன நிர்வாக அனுசரணையுடன் திறந்துவைக்கப்பட்டன.

சமூக பொருளாதாரரீதியாக மிகவும் பின்தங்கிய நிலையில் வாழ்ந்துவருகின்ற மாணவர்களினதும், பெற்றோர்களை பாதுகாவலர்களை இழந்து தங்களது கல்வியைத் தொடரமுடியாத மாணவர்களினதும், போக்குவரத்துப் பாதைகள் சீரின்மையாலும், போக்குவரத்து வசதிகளின்றியும், தூர இடங்களிலிருந்து கல்வி கற்க முடியாது பல சிரமங்களை எதிர்நோக்கிவந்த மாணவர்களினதும் கல்விவளர்ச்சியைக் கருத்திற் கொண்டே இவ்விரு இல்லங்களும் திறந்து வைக்கப்பட்டன.

மாணவ, மாணவியர்கள் இல்லங்களிலிருந்து பாடசாலைகளுக்கும் ஏனைய கல்வி நிலையங்களுக்கும் சென்றுவருவதற்காக துவிச்சக்கரவண்டிகளும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் வழங்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (ற-4)

## சிறுவர் இல்லங்களை மேற்பார்வை செய்து உடன் அறிக்கை சமர்ப்பிக்குக!

### சுகாதார வைத்திய அதிகாரிகளுக்கு அறிவுறுத்து

யாழ்.மாவட்டத்தில் இயங்கும் சிறுவர் இல்லங்கள் சிறுவர் பராமரிப்பு நிலையங்களை மேற்பார்வை செய்து அறிக்கை சமர்ப்பது அவசியம் என பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் சகல சுகாதார வைத்திய அதிகாரிகளிற்கும் கடிதம் மூலம் அறிவுறுத்தியுள்ளார்.

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, யாழ். மாவட்ட சுகாதார சேவைகள் திணைக்கள அதிகாரிகளுக்கான மாவட்ட பிராந்தியப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர், பிராந்திய உணவு மருந்து பரிசோதனை அதிகாரி சம்பந்தப்பட்ட சுகாதார வைதத்திய அதிகாரி, அவ்விடத்து பொதுச் சுகாதாரப்பரிசோதகர், மேற்பார்வை குடும்ப நலசேவை உத்தியோகத்தர் அடங்கிய 5 பேர் கொண்ட குழு மேற்படி சிறுவர் இல்லங்களிற்கு விஜயம் செய்யும்.

அங்குள்ள சுகாதாரம் சம்பந்தமான பிரச்சினைகளை இனம் கண்டு அவற்றிற்குத் தேவையான தீர்வுகளைப் பெற்றுக்கொடுத்து ஆலோச்னைகளையும் வழங்க இக குழு நடவடிக்கை எடுக்கும்.

குறிப்பாக, சிறுவர் இல்லங்களில் சிறுவர்களது போசாக்கு மற்றும் சுற்றாடல், சுகாதாரப், சுகாதாரமான உணவு விநியோகம், கழிவுநீர், கழிவுப் பொருட்களை சுகாதாரமான முறையில் அகற்றுதல் போன்ற விடயங்களை மேற்பார்வை செய்வதுடன் மேலும்சிறுவர்களது தனிநபர் சுத்தம், உளநலச் செயற்பாடுகளில் கவனமெடுக்கும் நடவடிககையில் ஈடுபடுவது தொடர்பாகவும் மேற்கண்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்றுள்ளது. (ற-252)

## விவாத அரங்கு - 8

**விடயம்**

**நம்மவர்கள் வெளிநாடு சென்றதனால்**

**எமது கலாசாரம்:**

✧ சீரழிந்துள்ளது.

✧ சீர்பெற்றுள்ளது.


**நடுவர்: சிரேஷ்ட சட்டத்தரணி**
**திரு.சி.சிவநேசன்**

**உங்கள் வாதங்களை எழுதி அனுப்பி வையுங்கள்.**


அனுப்பவேண்டிய முகவரி :
விவாத அரங்கு, வலம்புரி,
இல.1?, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

# ஐந்தாம் ஆண்டு நிறைவில் வளர்ச்சியடைந்த யாழ் தேசிய கல்வியியற் கல்லூரியின் தோற்றம்
























# இன்று ஒரு தகவல்

## நேர்காணல்

எனக்குத் தெரிந்த ஒருவர் ஒரு பத்திரிகை நிருபர் அடிக்கடி பல பேரைச் சந்தித்து பத்திரிகைகளுக்காகப் "பேட்டி" எடுப்பார் "பேட்டி" என்பதை தமிழிலே நேர்காணல் எனக் கூறுவர் இது ஒரு தனிக் கலை.

"கேள்வி கேட்கிற வேலை தானே அது ஒரு பெரிய காரியமா" என்று நினைப்பது தப்பு.

"ஒரு சர்வாதிகார நாட்டிலே கேள்வி கேட்பது கஷ்டம் ஒரு ஜனநாயக நாட்டிலே பதில் சொல்வது கஷ்டம்" என்று சொல்வது வழக்கம் எந்த நாடாக இருந்தாலும் ஒரு பத்திரிகைப் பேட்டிக் காக கேள்வி கேட்பதற்கு மிகுந்த சாமர்த்தியம் வேண்டும்.

ஒரு பத்திரிகைக்காக ஒருவரை பேட்டி காணப்போகும் போது என்னென்ன விஷயத்தை ஞாபகத்திலே வைத்துக்கொள்ள வேண்டும் என்பதைப் பற்றி ஒரு பத்திரிகையிலே சில குறிப்புக்களைப் பார்த்தேன். அதைத்தான் இப்போது இங்கே சொல்லப் போகிறேன்.

சுதந்திரப் போராட்டத்திலே ஈடுபட்ட ஒரு பெரியவரைப் பேட்டி காணப்போகிறீர்கள் உங்கள் பழைய அனுபவங்களைச் சொல்லுங்கள் என்று கேட்கிறீர்கள் நாற்பது வருஷங்களுக்கு முன்னாலே நான்..... இருந்த நேரத்தில் என்று ஆரம்பிக்கிறார் அவர்.

உடனே நீங்கள் குறுக்கே பாய்ந்து என்ன தேதி? என்ன கிழமை? என்ன நேரம் என்றெல்லாம் துளைத்து எடுக்கக் கூடாது அவர் நல்ல மனோபாவத்துடன் சொல்ல வருவதைச் சொல்லி முடிக்கட்டும் என விட்டு விடவேண்டும்.

கடைசியிலே அவரிடமோ அல்லது அவருக்குத் தெரிந்தவர்களிடமோ தேதியைக் கேட்டு அறிந்து கொள்ளலாம்.

ஒரு பெரிய பிரமுகரைப் பேட்டி காணப்போகிறீர்கள் நீங்கள் போகும் நேரத்தில் அவர் தன்னுடைய பேரப்பிள்ளைகளோடு கிட்டிப்புள் விளையாடிக் கொண்டிருக்கிறார் என்று வைத்துக் கொள்ளுங்கள் அல்லது இடுப்பிலே ஒரு துண்டைக்கட்டிக்கொண்டு தோட்டத்திலே பூமரங்களுக்கு தண்ணீர் ஊற்றுகிறார் என வைத்துக்கொள்ளுங்கள் அதைப் பார்த்து நீங்கள் ஆச்சரியப்படுவதாகக் காட்டிக் கொள்ளக்கூடாது இயல்பாக நடந்து கொள்ளுங்கள் .

ஒரு விஷயத்தை உங்களிடம் சொன்ன பின் இதை உங்கள் பத்திரிகையிலேயே போடவேண்டாம் என அவர் சொன்னால் அதைப் போடாதீர்கள்.

அவர் சொல்லும் விஷயம் அல்லது பதில் உங்களுக்குப் புரியவில்லையென்றால் அதைத்திரும்பவும் கேட்டு விளங்கிக்கொள்வதில் தப்பு எதுவும் இல்லை.

நீங்கள் அவரை நோக்குக் கேள்விகள் கேட்டுக் கொண்டிருக்கும் போது அவர் அதற்குப் பதில் சொல்லாமல் உங்களிடம் கேள்வி கேட்கிறார். என்று வைத்துக்கொள்ளுங்கள்.

உடனே நீங்கள் எச்சரிக்கையாகி விடவேண்டும் ஏனெனில் அவர் உங்களைத் திசை திருப்பி எங்கேயாவது அழைத்துக்கொண்டு போய் விடுவார்.

ஒரு குறிப்பிட்ட பிரச்சினையிலே இதுதான் என்னுடைய கருத்து என்று ஒருவர் சொல்கிறார்.

இதே பிரச்சினையைப் பற்றி சில பேர் இப்படிச் சொல்கிறார்களே என்று கேளுங்கள்.

இது அவரைத் தூண்டிவிட்ட மாதிரியும் இருக்கும் அந்த் விஷயத்திலே உங்களுக்கு ஏதும் பொறுப்பில்லை என்று காட்டிய மாதிரியும் இருக்கும். உங்களுக்கு நன்றாகத் தெரிந்த ஒரு விஷயத்தை ஒருவர் உங்களுக்கு விளக்கிக் கொண்டிருக்கிறார் என்று வைத்துக்கொள்ளுங்கள்.

அது எனக்குத் தெரியுமே என்ற மாதிரிப் பேசவேண்டாம் உங்களுக்கு அது பற்றி எதுவுமே தெரியாத மாதிரி இருந்து கேள்வி கேளுங்கள்.

இந்த விஷயத்தை இன்றும் கொஞ்சம் விபரமாகச் சொல்ல முடியுமா? என்று கேளுங்கள் அதனாலே நீங்கள் ஒன்றும் குறைந்து போயவிடமாட்டீர்கள் ஒரு பேட்டி எடுக்கும் போது அது தொடர்பாக உங்கள அனுபவத்தையும் இடையே சொல்லாதது நல்லது. தான் இருந்தாலும் கேள்வி கேட்கிற நீங்களே அதிகமாகப் பேசிக்கொண்டிருக்கக் கூடாது.

கொஞ்சம் கடினமான கேள்வியாக இருந்தால் ஒரு முறைக்கு இரு முறை கேட்கலாம். இரண்டாவது முறை கேட்கும் போது அதே கேள்வியைக கொஞ்சம் மாற்றி வேறு விதமாகக் கேட்கலாம்.

சில பேர் பதில் சொல்கிறபோது சில தர்மசங்கடமான விஷயங்களைப் பற்றிப் பேசவேண்டியிருக்கும் அவரே தயங்கித் தயங்கி யோசனை பண்ணி பதில் சொல்லிக் கொண்டிருப்பார். அந்த நேரத்தில குறுக்கே போசாதீர்கள்.

அவர் சொல்லி முடிக்கிறவரை காத்துக்கொண்டு இருங்கள் ஏனென்றால் அந்த மாதிரிச் சந்தர்ப்பங்களிலே சில சுவரஸ்யமான விஷயங்கள் கிடைத்தாலும் கிடைக்கலாம்.

இவையெல்லாம் பேட்டி காண்பவர்களுக்கு அனுபவசாலிகள் சொல்லியிருக்கின்ற யோசனைகள் இவை எல்லாவற்றையும் விட சொந்த அனுபவத்தில் கற்றுக்கொள்ளவேண்டியவையே அதிகம்.

ஒரு பெரிய மனிதரை ஒரு பத்திரிகை நிருபர் பேட்டி கண்டார். கடைசியிலே அப்பேட்டியைப் பத்திரிகையிலே போடும் போது அந்தப் பெரிய மனிதர் அவர் வீட்டிலே மனைவிக்குத் துணியெல்லாம் துவைத்துக்கொடுக்கிறார் என்று போட்டு விட்டார். அந்த நிருபர்.

உடனே அந்த நிருபரைக் கூப்பிட்டுக் கண்டபடி கத்தினார் அந்தப் பெரிய மனிதர். நான் உண்மையைத் தானே எழுதினேன் அதற்காக இப்படித் திட்டுகிறீரகளே என்றார். நிருபர் உண்மையை எழுதியதற்காக உன்னைத் திட்டவில்லை என்னுடைய குடும்ப இரகசியததை வெயியே சொல்லி விட்டாயே அதற்தகாகத்தான் சாபமிடுகிறேன் என்றார் அப் பெரிய மனிதர்.

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

## உலக வங்கியின் நிதியுதவியுடன் வலி-மேற்கில் 70 வீடுகள் நிர்மாணம்

(பொன்னாலை)

உலக வங்கியின் நிதிப்பங்களிப்புடன் வலி-மேற்குப் பிரதேசத்தில் 70 வீடுகள் அமைக்கப்படவிருக்கின்றன.

இதற்கான நடவடிக்கைகளை வலி-மேற்குப் பிரதேச செயலர் சீ.ஏ.மோகன்றாஸ் மேற்கொண்டுள்ளார்.

மேற்படி பிரதேச செயலர் பிரிவில் மிகவும் பின்தங்கிய கிராமங்கள் என இனங்காணப்பட்ட பகுதிகளிலேயே மேற்படி 70 வீடுகளும் அமையவிருக்கின்றன.

இந்த வகையில் செம்மணத்தி, ஊரத்தி, முன் கோட்டை, மூளாய் பிள்ளையார் கோயிலடி பின்குறிச்சி ஆகிய கிராம வாழ் மக்களுக்கு இவ்வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன.

(ற-49)

## காய்ச்சலால் பீடிக்கப்படுவோர் தொகை தென்மராட்சியில் திடீர் அதிகரிப்பு

(தென்மராட்சி)

தென்மராட்சியில் காய்ச்சலினால் பீடிக்கப்படுவோரின் தொகை அண்மையில் திடீரென அதிகரித்துக் காணப்படுவதாக சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலை வட்டாரங்களில் இருந்து தெரியவந்துள்ளது.

இதன் காரணமாக இவ் வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவுக்கு நாளாந்தம் 200க்கும் மேற்பட்ட நோயாளர்களும் சுமார் 25 பேர் வரை உள்ளக நோயாளர்களாகவும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதே சமயம் வைத்தியசாலையில் உள்ளக நோயாளர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளமையினால் வடுதிகளில் போதிய இடவசதியும் கட்டில் மெத்தை வசதிகளும் போதாமல் இருப்பதாகவும் அறியப்படுகின்றது.

சாவகச்சேரி மாவட்ட வைத்தியசால்லைக்கு சிகிச்சை பெறுவதற்கென தென்மராட்சிப் பிரதேசம் மற்றும் பச்சிலைப்பள்ளி பிரதேசங்களில் இருந்த நோயாளர்கள் வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ற-16)

## மாவிலைத் தத்தித் தாக்கத்தை கட்டுப்படுத்த நடவடிக்கை

(பொன்னாலை)

வலி மேற்கு பிரதேசத்தில் உள்ள மாமரங்களில் ஏற்படும் மாவிலைத் தத்தித் தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கு தொல்புரம் கமநல சேவை நிலையத்தின் விவசாயப் போதனாசிரியர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

இது தொடர்பாக விவசாயப் போதனாசிரியர் வி.செல்வநாயகம், மாவிலைத் தத்தித் தாக்கத்தை மருந்து விசிறிக் கட்டுப்படுத்த முடியும்.

எனவே மருந்து தெளிக்கக் கூடிய தெளிகருவி தொல்புரம் விவசாயப் போதனாசிரியர் அலுவலகத்தில் இருப்பதால் தேவையானவர்கள் கமக்காரர் அமைப்புக்கள் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ தன்னுடன் தொடர்புகொள்ளுமாறு அவர் அறிவித்துள்ளார். (ற-49)

## உடைந்த வள்ளங்களுடன் உரிமையாளர் போராட்டம்

(திருநெல்வேலி)

சுனாமி அனத்தத்தின் போது உடைந்த தமது வள்ளங்களுடன் வீதியில் இறங்கிப் போராட்டம் நடததப் போவதாக வல்வெட்டித்துறைப் பகுதியில் உள்ள கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் வடமராட்சி வடக்கு கடற்தொழிலாளர் சமாசத்திற்கும் இலங்கை அரசிற்கும் எச்சரிக்கை விடுத்துள்ளன.

சுனாமி அனர்த்தம் ஏற்பட்டு பல மாதங்கள் கடந்தும வல்வெட்டித்துறைப் பகுதியில் உள்ள வள்ளங்களின் உரிமையாளர்களிற்கு "வள்ளம்" வழங்க கடற்தொழிலாளர் சமாசமோ அரசோ இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

மூன்றரைத் தொன் நிறையுடைய எமது வள்ளங்கள போன்று எமக்கு வள்ளங்கள் கிடைக்காவிட்டால் அடுத்தவாரம் தொடக்கம் உடைந்த வள்ளங்களுடன் வீதி மறியலில் ஈடுபடுவோம் என அவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். (க-43)

## தலதா மாளிகையின் திறப்புக்களை கையளிக்க அஸ்கிரிய பீடாதிபதி மறுப்பு

(கொழும்பு)

கண்டி தலதா மாளிகையின் பதில் தியவடன நிலமேயிடம் மாளிகையின் திறப்புக்களை கையளிக்க அஸ்கிரிய பீட மகாநாயக்கர் மறுப்புத் தெரிவித்துள்ளார்.

கண்டி தலதா மாளிகையின் தியவடன நிலமேயாக பணியாற்றிய நிரஞ்சன் விஜேரத்னவின் பதவிக் காலம் கடந்த நான்காம் திகதியுடன் முடிவடைந்தது.

புதிய தியவடன நிலமே ஒருவர் தெரிவு செய்யப்படும் வரை பதில் நிலமேயாக கடந்த வியாழக்கிழமை முதல் ரோகண பரணகம என்பவர் நியமிக்கப்பட்டார். இவர் கண்டி பத்தினியம்மன் தேவாலயத்தின் நிலமேயாவார்.

இவரின் நியமனம் குறித்து அறிவித்தல் விடுத்த மல்வத்தை மற்றும் அஸ்கிரிய மகாநாயக்கர்கள் தலதா மாளிகையானது பௌத்த நடவடிக்கைகளின் மையமாக விளங்க வேண்டும் எனத் தெரிவித்தனர்.

புதிய தியவடன நிலமேயைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் அடுத்த மாதம் ஆறாம் திகதி நடைபெறவுள்ளது.

அநதத் தேர்தலில் உத்தியோகபூர்வமாகத் தெரிவு செய்யப்படும் நிலமேயிடமே மாளிகையின் திறப்புக்கள கையளிக்கப்படும் என அஸ்கிரிய பீடாதிபதி உடுகம சிறி புத்தரகிதத தேரர் தெரிவித்துள்ளார்.

அதுவரை பதில் நிலமேயாகக் கடமையாற்றுபவரிடம் திறப்புக்களை கையளிக்க முடியாதெனவும் அவர் தெரிவித்துள்ளார். (க-4)

## கடற்றொழிலாளர்களுக்கான நிவாரணத்திற்கு புதிய நடைமுறை

(கொழும்பு)

கடற்றொழிலாளர்களுக்கு வழங்கப்படும் நிவார ணங்கள் மற்றும் கடற்தொழில் சார்ந்த நிர்மான புனரமைப்பு நடவடிக்கைகள் யாவும் எதிர்காலத்தில் கடற்றொழில் நீரியல் வள அமைச்சுடன் இணைந்தே மேற்கொள்ளப் படவேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது.

சுனாமி அனர்த்தத்தின் பின்னர் பல்வேறு அரச மற்றும் அரசு சார்பற்ற நிறுவனங்கள் கடற்றொழில் துறைக்காக வழங்கிய நிவாரணங்கள் திட்டமிடப்படாமல் நடைமுறைப்படுத்தப்பட்டதன் காரணமாக இந்தத் துறையில் பல்வேறு பிரச்சினைகள் உருவாகி வருவதாக கடற்தொழில் நீரியல் வள அமைச்சர் சந்திரசேன விஜயசிங்க சுட்டிக் காடடினார்.

கடற்றொழிலில் ஈடுபடாதவர்களுக்கு நிவாரணங்கள் கிடைத்தமை ஒருவருக்கு ஒரே வகையான நிவாரணங்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் கிடைத்தமை மற்றும் பலன்களை பெறவேண்டியவர்களுக்கு நிவாரணம் கிடைக்காமை போன்றவற்றில் மீன்பிடித்துறையில் பல முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதாகவும் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (ற-5,9)

### இன வன்செயல்களில் பாதிக்கப்பட்டோருக்கு

## நஷ்டஈடு வழங்கும் திட்டத்திற்கு ஜனாதிபதிக்கு பாராட்டு

(கொழும்பு)

1981 ஆம் ஆண்டு தொடக்கம் 1984ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குள் இவை வன்செயல்களினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நஷ்ட ஈடுபெற்றுக் கொடுத்ததன் மூலம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சர்வதேச மட்டத்தில் பாராட்டினைப் பெற்றுள்ளார. என்று இன வன்செயல்கள், பாதிப்புக்கள் பற்றி உண்மையறியும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் உறுப்பினரும் ரூபாவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் தலைவருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம் முஷிதீர் தெரிவித்துள்ளார்.

இந்த ஆணைக்குழுவின் செயற்பாடுகள் சிறந்த முறையில் இடம்பெற்றதால் இரண்டாவது கட்ட நஷ்ட ஈட்டுக்கு விண்ணப்பித்தவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

இந்த வன் செயல்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்க நஷ்டஈடு வழங்கும் பொருட்டு ஆராய்வதற்கென ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட உண்மையறியும் ஆணைக்குழுவின் செயற்பாடுகள் தொடர்பாக விளக்கமளிக்கும் மாநாடு அண்மையில் நிவாரண மற்றும் புனர்வாழ்வு நல்லிணக்க அமைச்சில் நடைபேற்றது. இதன்போதே அவர் இதனைத் தெரிவித்தார். (ற-4)

## சடலம் மீட்பு

(கொழும்பு)

வவுனியாவில் நேற்றுக் காலை கழுத்தில் வெட்டுக்காயங்களுடன் சடலம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

வவுனியாவிற்கு மேற்கே 13 கிலோ மீற்றர் தொலைவில் இருக்கும் வாரிக்குட்டியூர் எனும் கிராமத்தைச் சோந்த கந்தையா சிறீதரன் (வயது-55) என்பவரின் சடலமே இதுவென அடையாளம் காணப்பட்டுள்ளது.

நான்கு பிள்ளைகளின் தந்தையான இவரின் சடலம் நேற்றுக்காலை 7.30 மணியளவில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

புதர்களுக்கிடையில் கிடந்த சடலத்தைக் கண்ட கிராமவாசிகள் அது குறித்து பொலிஸாருக்கு அறிவித்தனர்.

இதணையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த செட்டிக்குளம் பொலிஸார் சடலத்தைக் மீட்டுள்ளனர். (ச-4)



தென்னைப்பயிர்ச்செய்கைச் சபையின் தலைவர் டாக்டர் ஜெயந்த குணதிலகவின் யாழ். விஜயத்தின் போது தெ.ப.சபையின் பிராந்தியக்காரியாலயத்தில் இடம்பெற்ற வரவேற்பு நிகழ்வில் உதவிப் பொதுமுகாமையாளர் ஜீ.ஜீ.பீ. அபபோசேகராவுக்கு ஜெ.சத்தியேந்திரன் தென்னை அபிவிருத்த உததியோகத்தர் மலர் மாலை அணிவித்து கௌரவிப்பதையும் அருகே டாக்டர் ஜெயநத குண திலக நிற்பதையும் படத்தில காணலாம்.

# காசநோய்

## பக்க விளைவு

மனிதன் ஒவ்வொரு நோயினைக் குணப்படுத்த புது மருந்தினைக் கண்டுபிடிக்கும் போது அம் மருந்திற்கு பக்கவிளைவாக புதிய நோயையும் உருவாக்குகின்றன. அந்த வகையில் காசநோய்க்கான மருந்துகளும் விதிவிலக்கப்படும். மருந்துகளை உட்கொள்ளும் போது சிறுநீர்.வியர்வை செந்நிறமாகக் காணப்படும். அதற்கு அச்சம் கொள்ளத் தேவையில்லை. கை.கால் விறைப்பு மூட்டுக்களில் நோ காணப்படலாம். கண் சிவத்தல். உடல் சொறிவு ஏற்படலாம்.

மருந்துகள் உட்கொள்ளும் போது சூடை போன்ற மீன்களையும் மாசிக்கருவாடு. தகரத்தில் அடைத்த மீன்களையும் உட்கொள்ளக் கூடாது. ஒவ்வாமை சிறிது ஏற்படலாம். இதன்போது கண் மஞ்சள் நிறமாகும். இதன்போது மருந்துகளை உட்கொள்ளாது நிறுத்தி மார்புநோய் சிகிச்சை நிலையத்திற்குச் செல்ல வேண்டும்.

**காசநோய் பக்ரீரியாவால் ஏற்படும் தொற்று நோயாகும். இது உடலின் எப்பாகத்தையும் தாக்கலாம். நுரையீரல் தவிர நிணநீர்க்கனு, முள்ளந்தண்டு, மூளை மென் சவ்வு என்பவற்றிலும் காசநோய் ஏற்படலாம்.**

காசநோய் ஏற்படாது தடுக்க நோயைப் பரப்புவோரைக் கண்டுபிடித்து அவர்களுக்கு சரியான சிகிச்சை பெற வைத்து தடுப்படுத்தல் இன்றியமையாததாகும். நோயாளிக்கு சரியான சிகிச்சையை பெற அவரது குடும்பத்திற்கு உதவவேண்டும். அப்பகுதி சுகாதார சேவையாளர்களும் இதற்கு உதவ வேண்டும். இதனால் முற்றாக காசநோயைக் கட்டுப்படுத்தலாம்.

இருமும் போதும். தும்மும் போதும் மூக்கு. வாய்ப்பகுதியை கைக்குட்டையால் மூடிக்கொள்ள வேண்டும். கண்டகண்ட இடங்களிலும் சளி.எச்சில் துப்புவதை தவிர்த்தல் வேண்டும். நோயாளியின் சளியை கவனமாகச் சேகரித்து ஆழமாகப் புதைத்துவிடல் வேண்டும். அல்லது காற்றோட்டமான சூரிய ஒளிபடும் பழைய கடதாசியில் எடுத்து எரித்துவிடல் வேண்டும். காற்றோட்டமான சூரிய ஒளி படும் இடங்களில் வசிக்க வேண்டும்.

நோயாளியுடன் நெருக்கமாகப் பழகுபவர்கள் மார்புநோய் சிகிச்சை நிலையத்தில் சளிப்பரிசோதனை செய்யவேண்டும். நெருக்கமான இடங்களில் வசிப்போர். தொழில் புரிவோர். இந்தியாவில் இருந்து மீண்டவர்கள் காசநோய் பற்றிய அறிகுறிகளிற்கு அவதானமாக இருக்க வேண்டும்.

**நோய்க்கிருமி வேறொருவரின் உடலில் உட்சென்றாலும் அவரின் நோய் எதிர்ப்புத் தன்மையிலும், உட்சென்ற நோய்க் கிருமிகளின் எண்ணிக்கையிலுமே நோய் உருவாகும் தன்மை தங்கியுள்ளது.**

காசநோயாளிகள் இடை நடுவில் மருந்துகள் கைவிட முக்கிய காரணம் மருந்துப் பாவனையின் பின் நோய் அறிகுறிகள் அற்றவுடன் நோய் முற்றாக மாறிவிட்டது என்ற தப்பெண்ணமாகும். இவ்வாறு மருந்துகளை இடையிடையே ஒழுங்கின்றிப் பாவித்தால் கிருமிகள். நுண்ணுயிர் கொல்லிகளுக்கு எதிர்ப்புத் தன்மை உடையதாக உருவாகி விடும். மேலும் தனித் தனியே ஒவ்வொரு மருந்துகளைக் கொடுக்கும் போது நோய் எதிர்ப்புச் சக்தியை பெற்றுவிடும் என்பதால் ஒரே தடவையில் நான்கு மருந்துகள் கொடுக்கப்படுகின்றன. இவை ஒவ்வொருவரின் உடல் நிறைக்கு ஏற்ப கொடுக்கப்படுகின்றன.

**3 வாரங்களுக்கு மேலான தொடர்ச்சியான இருமல், சளியுடன் இரத்தம் வெளியேறல், மார்பில் நோ, சுவாசிப்பதில் சிரமம், எளிதில் களைப்பு, உணவில் நாட்டமின்மை, மாலையில் மெல்லிய காய்ச்சல், இரவில் அதிக வியர்வை, அதிக சோர்வு... இவற்றில் ஒன்றோ சிலவோ காசநோய்க்கான அறிகுறிகள்.**

இறுதியாக சாதாரண யாழ்.வாசி எவ்வாறு யுத்தத்தினால் பாதிக்கப்பட்டானோ அவ்வாறே காசநோய்க்கான சிகிச்சைக் கட்டமைப்பு முற்றாக பாதிக்கப்பட்டது. யாழ். பண்ணையில் இருந்த மார்புநோய் வைத்தியசாலையும். சிகிச்சை நிலையமும் போர்க்களமாக மாறிய பின் தரைமட்டமாகியது. தற்போது புதிய கட்டடத்துடன் மீளவும் செயற்படக் கூடிய நிலைமைக்கு செல்லுகின்றது.

ஆனால் மயிலிட்டி வைத்தியசாலை 1987 ஆம் ஆண்டு இந்திய இராணுவ ஆக்கிரமிப்பில் இடம்பெயரத் தொடங்கி கோப்பாய். சாவகச்சேரி. மீண்டும் கோப்பாய் என அகதி வாழ்க்கை வாழ்ந்து வருகின்றது. காசநோய்க்கான சிகிச்சை தற்போது சமுதாய மட்டத்தில் மேற்கொள்ளப்படுவதால் அதற்கென கட்டாயம் வைத்தியசாலை அவசியம் இல்லை எனக் கருதமுடியாது.

சில நோயாளிகளை வைத்தியசாலையில் வைத்தே சிகிச்சை செய்ய வேண்டும். ஒரு சமூகத்தின் நுரையீரல்கள் என மார்புநோய் வைத்தியசாலைகளைக் கூறலாம். அச்சமூகம் நலமாக சுவாசிப்பதற்கு மார்புநோய் வைத்தியசாலை இன்றியமையாதது என்றால் மிகையில்லை. ஆயின் நுரையீரல் இருக்குமிடம் நெஞ்சறை போன்று மார்புநோய் வைத்தியசாலையும் உரிய இடத்தில் அமைதல் நன்று.

எம்மவர் எவ்வாறு கனடாவில் புலம் பெயர்ந்து வாழ்வது போல் காசநோயும் கனடா பிரஜா உரிமை பெற்றுள்ளது. கனடாவில் உள்ள காசநோயைக் கட்டுப்படுத்த வேண்டுமெனில் யாழ்ப்பாணத்தை புறக்கணிக்க முடியாது என்ற அரசியல் பொருளாதார சமுதாய மருத்துவ உண்மையை எல்லோரும் உணரவேண்டும். □

**டாக்டர் சி.யமுனானந்தா**
யாழ்.மாவட்ட காசநோய் வைத்திய அதிகாரி

## விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

வலி கிழக்கு பிரதேச செயலகப் பிரிவின் வருடாந்த விளையாட்டு விழா நாளை பிற்பகல் 3.00 மணிக்கு நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

கோப்பாய் உதவி பிரதேச செயலாளர் திருமதி அ. சாந்தசீலன் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக மாவட்ட செயலகத் திட்டப் பணிப்பாளர் க. கேதீஸ்வரனும், கௌரவ விருந்தினர்களாக வலி கிழக்கு பிரதேச சபை செயலாளர் த. நடராசா, யாழ். மாவட்ட விளையாட்டுத்துறை பொறுப்பாளர் ரி.மாதுளன் ஆகியோரும் சிறப்பு விருந்தினராக அத்தியார் இந்துக் கல்லூரி அதிபர் இ.குணநாதனும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இதேவேளை, இன்று காலை 6.30 மணிக்கு கோப்பாய் பிரதேச செயலக முன்றலில் இருந்து மரதன் ஓட்டப்போட்டி நிகழ்வும் ஆரம்பமாகவுள்ளது.

இன்றைய தினமே கோப்பாய் பிரிவைச் சேர்ந்தவர்கள் பதிவினை மேற்கொண்டு போட்டிகளில் கலந்துகொள்ள முடியுமெனத் தெரிவிக்கப்படுகின்றது. (ந-2)

## 'சமதளம்' வெளியீட்டு விழா

(புங்குடுதீவு)

மாகாண கூட்டுறவுப் பயிற்சி நிறுவனத்தின் பயிலுனர் மன்றத்தின் ''சமதளம்'' சஞ்சிகையின் வெளியீட்டு விழா எதிர்வரும் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப.2.00 மணிக்கு வவுனியா கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி அதிபர் சி.கோணேஸ்வரன் தலைமையில் மாகாணக் கூட்டுறவுப் பயிற்சி நிறுவன மண்டபத்தில் நடைபெறவுள்ளது.


இதில் பிரதம அதிதியாக வடக்கு-கிழக்கு மாகாண கூட்டுறவு ஆணையாளரும், கூட்டுறவுச் சங்கப் பதிவாளருமான இ. இளங்கோவனும், சிறப்பு அதிதியாக வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் எஸ். சண்முகம், வவுனியா கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் என்.முருகேசு, வவுனியா கல்வியியற் கல்லூரி அதிபர் கே.பேனட் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

நூல் வெளியீட்டுரையினை வவுனியா கூட்டுறவு பயிற்சி நிறுவன உப அதிபர் ஞா. கேதீஸ்வரன் நிகழ்த்துவார்.

முதற்பிரதியை வவுனியா சி.க.கூ. சங்கங்களின் சமாசத் தலைவர் நா.சேனாதிராஜா பெறவுள்ளார்.

நூல் ஆய்வுரையினை வவுனியா பல்கலைக்கழக பீடாதிபதி இ. நந்தகுமாரனும், பதிலுரையினை பத்திராதிபர் என். நவநீதனும் நிகழ்த்தவுள்ளனர். (ந-126)





யாழ்.பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில் அண்மையில் நடைபெற்ற நபிகள் நாயகத்தின் பிறந்தநாள் விழாவில் கலந்து கொண்ட யாழ்.ஒஸ்மானியாக் கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், மாணவ மாணவிகளையும் அதிபர் ஜனாப் எம்.எஸ்.ஏ.எம். முபாரக் சொற்பொழிவு ஆற்றுவதையும் நிலையத்தினால் அன்பளிப்புகள் வழங்கப்படுவதையும் படங்களில் காண்க.

## ஒருவரை மற்றவர் சாடுவதால் மக்களுக்கு என்ன பலன்?

(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணி அரசு காலத்தில் நூற்றுக்கு முப்பத்தெட்டு வீத மின்சார கட்டணத்தை அதிகரித்த போதும், கூட்டமைப்பு அரசாங்கம் அவ்வாறு அதிகரிக்க வில்லையென்று மின்சக்தி, எரிசக்தி அமைச்சர் சுசில் பிரேம ஜெயந்த தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், மின்சார கட்டணத்தை இவ்வாறு அதிகரித்த போதும், மின்சாரசபை நஷ்டத்தை ஐக்கிய தேசிய முன்னணி அரசினால் சீர் செய்ய முடியவில்லை. ஆனால் அவர்கள் இன்று எம்மை சாடுகின்றார்கள்.

ஒரு அலகு மின்சாரத்தை உற்பத்தி செய்ய அரசாங்கம் 9ரூபா 90 சதத்தைச் செலவிட்டாலும் அதனை 7ரூபா 7சதத்துக்கும் விற்பனை செய்ய நேர்ந்ததினால் நாளாந்தம் 40 மில்லியன் ரூபா நஷ்டம் ஏற்படுகிறது.

மின்சார உற்பத்தியிலிருந்து பாவனையாளர்களை சென்றடையும் வரை நூற்றுக்கு 20 வீதமான மின்சாரம் வீணாகிறது என்றும் குறிப்பிட்டார். (ந-8)

## ஜி.ரி.இசற் நிறுவனம்

## பல கோடி ரூபா செலவில் பாடசாலைகள் புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

ஜேர்மன் தொழில்நுட்ப ஒத்துழைப்பு நிறுவனம் வட பகுதியில் யுத்த அனர்த்தங்களினால் சேதமடைந்த பாடசாலைகளில் 73 பாடசாலைக் கட்டடங்களை பல கோடி ரூபா செலவில் புனரமைப்புச் செய்துள்ளது.

அரசாங்கத்தின் நிவாரணம், மீள்குடியேற்றம், நல்லிணக்க அமைச்சுடன் இணைந்து செயல்பட்டுவரும் இந்த நிறுவனம் வட பகுதியிலுள்ள பாடசாலைகளில் மட்டும் 497 சுகாதாரக் கழிவறைக் கூடங்களை நிறுவியுள்ளன.

அத்துடன், இந்த நிறுவனம் வட பகுதியில் இடம்பெற்ற யுத்த நடவடிக்கைகள் காரணமாகத் தத்தமது இருப்பிடங்களை இழந்தவர்களில் இதுவரை 2 ஆயிரத்து இரண்டு பேருக்கு தலா ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான வீடுகளை அமைத்துக் கொடுத்துள்ளதாகவும் தெரியவருகிறது.

இவை தவிர ஜேர்மன் தொழில்நுட்ப ஒத்துழைப்பு நிறுவனம் யாழ்ப்பாண மாவட்டத்தில் 17 கிராமிய நீர் விநியோகத்திட்டத்தினை ஆரம்பித்து, 353 குடிநீர் வழங்கும் குழாய் நிலையங்களையும் அமைத்துக் கொடுத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும். (ந-16)

டைரக்டர் ஷரவண சுப்பையாவின் அப்பா சுப்பையா ஒரு ஆசிரியர். அவருக்கு நடிப்பின் மீது நீண்டநாள் காதல். அதனால் தான் இயக்கும் 'ஏபிசிடி' படத்தில் சினேகாவுக்கு அப்பாவாகத் தன் அப்பாவுக்கு வாய்ப்புக் கொடுத்திருக்கிறார் ஷரவண சுப்பையா.

அதோடு சினேகாவின் கணவராக ஷரவண சுப்பையாவே நடித திருக்கறார். கதைப்படி கொடுமைக்காரக் கணவன். இதனால் கணவன் உயிரோடு இருக்கும்போதே வெள்ளைச் சேலை கட்டியிருப்பாராம் சினேகா. கணவன் இறந்ததும் வண்ணச்சேலை கட்டுபவராக வருகிறாராம்.


## சினிமாச் சிதறல்



# ஆறு விரல் நயன்தார

தமிழ்நாட்டிலுள்ள எந்த நடிகைக்கும் கை
ஆறு விரல்கள் இருந்தது இல்லை. 'சந்திரமுகி' ப
புகழ் கேரள வரவு நயன்தாராவுக்கு இடது கை
ஆறு விரல்கள் இருக்கிறது!

'கள்வனின் காதலி' படப்பிடிப்பில் அதைக் கண்டுபிடித்து கே
போது "உங்க பார்வை எங்கெங்கோ போகுதபபா..." என்று சிரி
படி கையைக் காட்ட, ஆறாவது விரல் குட்டியாக இருந்தது. அது
கையில் ஆறுவிரல் இருப்பது அதிர்ஷ்டத்தின் அறிகுறி என்று செ
வார்களே!



# 'சந்திரமுகி'யில் என் திறமையை நிரூபிக்க வாய்ப்பு கிடைத்தது- ஜோதிகா



'சந்திமுகி' வெற்றியால் ஜோதிகா மிகவும் பூரித்துப்போய் இருக்கிறார். இதுகுறித்து அவரிடம் கேட்டபோது...

'சந்திரமுகி'யில் நான் நடிக்க வந்தது எனது அதிர்ஷ்டம். ஆரம்பத்தில் சிம்ரன் நடிப்பதாகத்தான் இருந்தது... என் நல்ல நேரம் எனக்கு அந்த வர்ய்ப்பு வந்தது. அவருக்குப் பதிலாக நான் தேர்வுசெய்யப்பட்டேன். இதற்காக சிம்ரனுக்குத்தான் நான் நன்றி சொல்லவேண்டும். கதை கேட்டதும எனக்கு அந்தரத்தில் பறப்பதுபோல இருந்தது. 'மிரட்டும்' பாத்திரம். எனது ரசிகர்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்ற நல்ல வாய்ப்பு கிடைத்திருக்கிறது என்று அதை ஏற்றுக்கொண்டேன்.

படத்தை ஒத்துக்கிட்டதும், ரஜினி சார் முன்னால் எப்படி நடிக்கப் போகிறோமோ என்ற பயம் இருந்தது. ஆனால் முதல் சீன்லேயே 'சூப்பர்'ன்னு அவர் என்னைப் பாராட்டியபோது அவரது பெருந்தன்மை எனககுப் புரிந்தது..

படத்தின் கிளைமாக்ஸ் காட்சியில் என் திறமையை நிரூபிக்க நல்ல வாய்ப்பு கிடைத்தது. இதற்காக இரவு பகலாக பயிற்சி செய்தேன். பரத நாட்டியம் ஆடும்போது கணணில் கோபம் தெரியணும். கொலைவெறி இருக்கணும். ராகம் போட்டு பாடணும். இத்தனையும் பிரதிபலிக்கும் வகையில் என் நடிப்பு அமையணுங்கிறதில் கண்ணும் கருத்துமாக இருந்தேன்.


உண்மையாகவே, 'சந்திரமுகி' ஆவி என் மீது வந்துவிடடதாக நினைச்சு நடித்தேன். பரதநாட்டிய உடை அணிந்து கண்ணில் நிறைய மை தடவி பயங்கரப் பார்வையுடன், தலையை விரிச்சுப்போட்டு 'லக லக லக'ன்னு நான் குரல் கொடுத்தபோது, ரஜினி சாரே 'ஜோதிகாவா... இது...'ன்னு அவரையும் மறந்து அலறிட்டாரு. படப்பிடிப்பு குழு மொத்தமும் மிரண்டிடுச்சு.

'சந்திரமுகி' படத்தைப் பர்தா போட்டுக்கிட்டு, ரஜினி ரசிகர்களோட நானும் ஒரு ரசிகையா 9 முறை தியேட்டருக்குப் போய் பார்த்துட்டேன். கிளைமாக்ஸ் சீன்ல நான் 'லக லக லக' ன்னு குரல் கொடுககும்போது தியேட்டரே அதிருது. கை தட்டலும், விசில் சத்தமும் சநதோஷத்தை அள்ளக் கொடுக்குது.

'சந்திரமுக' படம் பார்க்க அம்மாவையும் ஒருநாள் அழைச்சிட்டுப் போயிருந்தேன். படம் பார்த்த அன்று இரவு, அம்மா என்னுடன் படுக்கப் பயந்து வேறு அறையில் போய் படுத்துக்கொண்டார்கள்.

இந்தப் படத்தில் நடித்த பிறகு, என்னாலும் சிறப்பாக நடிக்க முடியும என்ற திருப்தி எனக்குக் கிடைச்சிருக்கு. பி.வாசு சாரால் குஷ்புவுக்கு ஒரு 'சின்னத் தம்பி' கிடைச்ச மாதிரி எனக்கு 'சந்திரமுகி' அமைஞ்சிருக்கு. அதுவும் ரஜினிசார் சார்பாக அமைந்திருப்பது என் அதிர்ஷ்டம். கடவுளுக்கு நன்றி...

என்று படபடவென தனது எண்ணங்களைக் கொட்டித் தீர்த்தார் ஜோதிகா.



'இளமை இதோ'
மதுமிதா, சாய்ராகேஷ்

# புதுமுகங்கள் நடிக்கும் '1 4 3 ஐ லைக்

மதுசூரி பிக்சர்ஸ் சார்பில் எம்.ரவி தயாரிக்கும் படம் '1-4-3
லைக் யூ' இதில் விஸ்வஜித் நாயகனாக அறிமுகமாக, க
நாயகியாக புதுமுகம் ஷெர்லி அறிமுகமாகிறார். பல படங்கள
நாயகனாக நடித்திருக்கும் ரவிராகுல், இதில் முதன்முறைய
வில்லனாக நடிக்கிறார்.

முக்கிய கரக்டர்களில் நாசர், ஜோஸ்வா, சுகுமார், ஸ்ரீல
நடிக்கின்றனர்.

கதை, திரைக்க
வசனம் எழுதி ஸ்ரீரா
இயக்குகிறார்.



இதயத்திருடன்
காம்னாஜித்மலானி

## ப்ரியாமணி ந

எஸ். ஜே.சூர்யா
வனின் காதலி' படத்தில் நா
கப்பட்டவர் ப்ரியாமணி
தனுசுடன் இவர் ந
காலம்' படத் ரிலீ
ப்ரியாமணி கேட்ட சம்பள
குறைத்துக் கொள்ளச் சொ
கேட்டதே சிறு தொகை
பற்றி யோசித்துக்கொண்டி
பபு எப்படியோ நயன்த
பத்திரிகைகளில் வ
அடடா... ரொம்ப யோசிச்ச
கொண்டிருக்கிறாராம்

கமல்ஹாசன் ஜோடிய
'வேட்டையாடு வி
படத்துக்காக உடல்
குறைக்கப் போகிறார

* * *

'துறும்பு' படத்தை இ
வர்த்தன் தற்போது '
யாமலும்' பட இ

* * *

பாதியில் நின்றிருந்த
படப்பிடிப்பு தற்போது
பெற்று வருகிறது. செ
படத்தை இயக்

* * *

'தித்திக்குதே' படத்
ரவிமர்யா, தற்போது 'அ,
துணை இயக்குனராகப் பண
இப்படம் முடிந்த பிறகு ஜீவ
படத்தை இயக்கவுள்

## பாண்டியரா
## நகைச்சுவை பட

ராக்.'.போர்ட் பிலிம்ஸ்
படம் 'ராசா... ராசா'.

இரண்டே கால் மணிநே
வைக்கும் நகைச்சுவைப் பட

பாண்டியராஜன் இப்படத்தி
கதாநாயகியாக புதுமுகம் ஒ
தேர்வு நடக்கிறது. வடிவேலு

இவர்களுடன் டெல்லி
மூர்த்தி, திடீர் கன்னையா,
றார்கள்.

விஷ்வாமாலிக் என்ற பு
தின் மூலம் அறிமுகமாகிறார்.
எழுதுகிறார்கள்.

'ராசா... ராசா' படத்தின்
எழுதி இயக்குகிறார் திருமணி.
பத்துவருடங்களுக்கும் மேல
பணியாற்றியவர் இவர்.


...ாரா

...கையில் ...கி' படப் ...கையில் ...கேட்ட ...சிரித்த ...அதுசரி, ...சொல்

...க் ரு'

...1-4-3 ஐ ..., கதா ...ங்களில் ...றையாக

...ஸ்ரீலதா ...க்கதை, ...ஸ்ரீராம்.டி



'ஒருநாள் ஒரு கனவு'
ஸ்ரீகாந்த், சோனியா அகர்வால்

## ...நழுவவிட்ட வாய்ப்பு!

...ர்யா கதாநாயகனாக நடிக்கும் 'கள் ... நாயகியாக நடிப்பதற்கு முதலில் அழைக் ...மணி தான்.

...ர் நடித்திருக்கும் 'அது ஒரு கனாக் ...லீலை... எதிர்பார்த்துக் காத்திருக்கும் ...ம்பளத்தில் இருந்து ஒரு லட்சம் ரூபாய் ... சொல்லியிருக்கிறார்கள். தாயாரிப்பு தரபபு ...கைதான் என்பதால் மேலும் குறைப்பது ...ண்டிருந்த இடைவெளியில் அந்த வாய் ...ன்தாராவுக்குப் போய்விட்டது.

... வரும் புகைப்படங்களைப் பார்த்து ...சிச்சது தபபாப் போச்சே.. என்று புலம்பிக ...ம் ப்ரியாமணி.

## 'காக்கி'யில் சரத்குமார்

'ஜித்தன்' படத்தில் என்கவுண்டர் ஸ்பெஷலிஸ்டாக நடித்துள்ள சரத்குமார், அர்.கே.வின் சென்ட் செல்வாவின் திறமையைப் பற்றி ஆஹா.. ஓஹோ... எனறு புகழ்கிறார். மீண்டும் அவரது இயக்கத்தில் நடிக்க உடனே கால்ஷீட் வழங்கிய அவர், இந்தப் படத்தை 'ஜி.ஜே.சினிமா' பட நிறுவனத்துக காக நடிக்கிறார். அக்ஷன் கதைகொண்ட இந்தப் படத்துக்கு 'காக்கி' என்று பெயரிடப்பட்டிருக்கிறது. மாறுபட்ட இரண்டு வேடங்களில் நடிக்கிறார் சரத்குமார்.

---

சிலம்பரசன் தனி இயக்குனராக அறிமுகமாகும் 'வல்லவன்' படத்தில் அவரது ஜோ்டியாக ரீமாசென், நயன்தாரா, 'காதல்' சந்தியா நடிக்கின்றனர். சமீபத்தில் இவர்கள் சம்பந்தப்பட்ட போட்டோ செஷனுக்காக இருபது லட்ச ரூபாய் செலவு செய்த தயாரிப்பாளர் பி.எல்.தேனப்பன், படத்தின் கதையைக் கேட்டவுடன் சிலம்பரசன் கேட்ட தொகையை வ்ழங்கிவிட்டாராம்.

...டியாக நடிக்கும் ... விளையாடு' ...டல் எடையைக் ...ாராம் ஜோதிகா.

*

...இயக்கிய விஷ்ணு ... 'அறிந்தும் அறி ...இயக்... வருகிறார்.

*

...த 'அன்பே வா' ... தொடர்ந்து நடை ...செல்வபாரதி இப் ...க்குகிறார்.

*

...த்தை இயக்கிய ...ஆ' படத்தில் ...பணியாற்றுகிறார். ...ீவா நடிக்கும் ...ுள்ளார்.



அந்நியன்
விக்ரம்-மேக்னாநாயுடு

## ...ராஜனின் ...ம் 'ராசா... ராசா'

... என்னும் நிறுவனம் தயாரிக்கும் ...

...நரம் விழுந்து விழுந்து சிரிக்க ...டமாக இது உருவாகிறது. ...தின் கதாநாயகனாக நடிக்கிறார். ...ஒருவர் நடிக்கிறார். அதற்கான ...முக்கிய பாத்திரத்தில் நடிக்கிறார். ...கணேஷ், 'வெண்ணிற ஆடை' ...மனோரமா ஆகியோரும் நடிக்கி...

...து இசையமைப்பாளர் இப்படத் ...பாடல்களை அறிவுமதி, பா.விஜய் ...

... கதை, திரைக்கதை, வசனம் ... பல பிரபல இயக்குனர்களிடம் ...லாக இணை இயக்குனராக

## சானியாவை இழுக்கும் முயற்சியில் சிம்பு



பார்த்திபன் நடிகை மந்திரா பேடியை தமிழுக்குக் கொண்டுவரும் முயற்சியில் இறங்கித் தோல்வியைத் தழுவினார். ஆனால் தனது சாமர்த்தய பேச்சால் 'மன்மதனில்' அவரை நடிக்க வைத்தார் சிம்பு.

தற்போது சிம்பு அழகுப் புயல் சானியா மிர்சாவை தனது அடுத்த படத்தில் நடிக்கவைக்க தீவிர முயற்சி எடுத்து வருகிறாராம். எனக்கு சினிமாவே வேண்டாம் என்று ஒதுங்குகிறார் சானியா. இருந்தாலும் சிம்பு தொடர்ந்து முயற்சி செய்து வருகிறாராம்.

---

தனக்கு வேண்டியவர்களுக்கு கார் ஓட்டத் தெரியாவிட்டால் உடனே கற்றுக்கொடுக்கிறார் கோபிகா. கோபிகாவோடு காரில் போகிறவர்கள் குலைநடுங்கிப் போவார்கள். அவ்வளவு ஸ்பீடாக காரை ஓட்கிறாராம் கோபிகா.

# மும்பை எக்ஸ்பிரஸ்

## திரை விமர்சனம்



மிரளவைக்கும் சாகங்களுடன் கலகலப்பூட்டும் நகைச சுவைப் படம்.

பொருட்காட்சி மரணக்கிணற்றில் மோர்ட்டார் சைக்கிள் ஓட்டுபவன் அவினாசி. செவிடன்.

ஆஸ்பத்திரியில் உயிருக்குப் போராடும் அக்காள் கணவரைக் காப்பாற்ற கடத்தல் கும்பலில் சேருகிறான்.

வில்லன் சிதம்பரத்துடன் பள்ளிக்கூடம் சென்று கோடீஸ்வரர் செட்டியார் மகனைக் கடத்தும்போது தவறுதலாகப் பொலிஸ் உதவி கமிஷனர் ராவின் ஆசைநாயகி அகல்யாவின் மகன் டட்டுவும் கடத்தப்படுகிறான்.

செட்டியார் கொடுக்கும் ஒரு கோடி ரூபாய் அவினாசி கைக்கு வருகிறது. பொலிஸ் அதிகாரி மகனை உயிரோடு விட்டால் பொலிசில் காட்டிக்கொடுத்து விடுவான் என்று அவனைக் கடத்தல் கும்பல் கொல்லத் துணிகிறது.

அவர்களிடம் இருந்து டட்டுவை மீட்டு அகல்யாவிடம் சேர்க்கிறான் அவினாசி. மனம் மாறி பணத்தை செட்டியாரிடம் திருப்பிக்கொடுக்க நினைக்கும்போது அந்தப் பணத்தைத் திருடுகிறாள் அகல்யா.





தாய்மீது வெறுப்பாகி தற்கொலைக்குத் துணியும் டட்டுவை அவினாசி தடுக்க அவனுககுத் தந்தையாக இருப்பேன் என்று உறுதிமொழி அளிக்க நேர்கிறது. அகல்யா வீட்டில் அவினர்சி தங்குகிறான். அவள் மீது காதல் ஏற்படுகிறது.

கடத்தல் பணத்தைச் செட்டியாரிடம் ஒப்படைக்கப் போகிறான் அவினாசி. மகன் மீட்கப்பட்டது தெரியாமல் கடத்தல்காரர்களுக்கு உதவி கமிஷனர் அனுப்பும் ஒரு கோடி ரூபாயும் அவினாசியின் கைக்கு வருகிறது.

இரண்டு கோடி ரூபாயுடன் நடக்கும் குழப்பமும், பொலிஸ் துரத்தலும் நகைச்சுவையாகவும், விறுவிறுப்பாகவும் சொல்லப்பட்டுள்ளது.

அவினாசியாக வரும் கமலஹாசன் வயிறு வலிக்க சிரிக்க வைக்கிறார். வானை முட்டும் இராட்சத கிரேனில் நடந்து கயிறைப் பிடித்து கீழே இறங்குவது மயிர் கூச்செரியவைக்கும் சாகசம்.

சிறுவன் டட்டுவை மோட்டார் சைக்கிள் பின்னால் வைத்துக்கொண்டு வில்லன்களிடம் இருந்து தப்பும் 'சேசிங்சீன்' ஹோலிவுட் ரகம். மரணக்கிணறு வடிவில் இருக்கும் கூண்டுக்குள் மோட்டார் சைக்கிளுடன் சுற்றி உச்சிக்கு வருவது கைதட்டல்.

செட்டியாரிடம் திருப்பிக் கொடுத்த பணத்தில் அக்காவுக்கு பங்கு வாங்கிக் கொடுப்பது ரகளை. உதவி கமிஷனர் கொடுத்த பணம் ரகசிய பொலிஸ் மூலம் கமலுக்கு கைமாறும் இடம் தியேட்டரைக் குலுங்க வைக்கிறது. மோட்டார் சைக்கிளில் சென்று ஓடும் ரெயிலில் தாவி ஏறுவது திக் திக்.

நாசரின் சின்ன வீடாக வரும் மனிஷா கொய்ராலா பாதி வில்லி... கிளைமாக்சில் நாசரை உதறிவிட்டு கமல் பக்கம் தாவுவது உதறல்.

சிதம்பரமாக வரும் பசுபதி காமெடி வில்லனாக கலக்கி உள்ளார். காதுகேட்காத கமலிடம் மாட்டி அவர் பண்ணும் யதார்த்தமான சேட்டைகள் ஆரவாரம். சிறு வனைக் கடத்தப் போய் மயக்கம் போட்டு விழுவது வெடிச்சிரிப்பு.



கடத்தல் கூட்டாளிகளாக வரும் வையாபுரி, ரமேஷ் அரவிந்த், செட்டியாராக வரும் சந்தானபாரதி, உதவி கமிஷனராக வரும் நாசர் ஆகியோர் ஆளாளுக்கு காமெடியில் கலக்கியுள்ளனர்.

டடுவாக வரும் சிறுவன் படு சுட்டி.

கோவை சரளா, சரத் சக்சேனா ஆகியோரும் உள்ளனர்.

இளையராஜாவின் இசையில் பாடல்கள் இனிமை. கமலஹாசனின் கதை, திரைக்கதை, வசனம் விறுவிறுப்பு. விமானங்கள் பறக்கும் போது கீழே காட்சிகளை உருவாக்கிய விதம் மிரட்டல்.

சித்தார்த்தின் கமரா முமபையை வழித்து வந்துள்ளது.

*மும்பை எக்ஸ்பிரஸ்..*
*காமெடி எக்ஸ்பிரஸ்*

# ஆற்றுப்படுத்தலில் நம்பிக்கையை வளர்த்தல்

வி.பி. தனேந்திரா

தென்காசிய நாடுகளில் ஏற்பட்ட சுனாமியின் தாக்கத்தினால், அநேகர் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். இவர்களில் ஒரு சிலர் தமது மனவடுக்களை மறந்து மீண்டும் தமது இயல்பு நிலைக்கு திரும்பி வருகிறார்கள். இன்னும் ஒரு சிலர் தமது மனவடுநிலையில் இருந்து இயல்பு வாழ்வுக்குள் செல்ல நீண்ட காலம் எடுக்கும். இவ்வுலகத்தில் மனிதர்கள் பல எதிர்பார்ப்புடனும் ஆசைகளுடனும் வாழ்கின்றார்கள். இவை கிடைக்காமல் போகின்ற போது அவற்றை தாங்கிக்கொள்வது மிகவும் கடினம். ஆனால் சுனாமி திடீரென்று ஏற்பட்டது. ஒரு நொடிப்பொழுதில் உயிர்களையும்- சொத்துக்களையும் அழித்துச் சென்றது. இந்த எதிர்பாராச் சம்பவத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் உடனே தமது இயல்பு வாழ்வுக்கு திரும்புவார்கள் என்று கூறிவிட முடியாது.

எனினும் இச்சூழ்நிலையில் இவர்கள் மனச்சோர்வு நிலையில் இருந்து விடுபடல் வேண்டும். அதனைக் குறித்து வேதனைப்படுவதினால் பயனில்லை. ஆகவே, பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவவேண்டும் என்ற உணர்வுள்ள மக்களும் இருக்கிறார்கள். இவர்களது வாழ்வு பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஓர் எடுத்துக்காட்டு. ஜனவரி மாதம் இலங்கை வந்த ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் கொபி அனானிடம் சுனாமியில் உங்களைப் பாதித்த விடயம் எது என்று கேட்டபோது "சுமாத்திராவில் ஒருவர் தனது குடும்ப அங்கத்தவர்கள் அனைவரையும் இழந்துவிட்ட போதிலும் ஏனைய மக்களுக்கு உதவ வேண்டும் என்பதற்காக சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்புப் பணியில் ஈடுபட்டு வந்தமையே" என்று கூறியிருந்தார்.

சுனாமியின் தாக்கத்தினால் மனதளவில் பாதிக்கப்பட்ட மக்களே இன்று அதிகம். குடும்ப வருவாயை ஈடுசெய்த கணவனின் இழப்பும்- பெற்ற குழந்தையை கண்முன்னே கடல் அள்ளிக் கொண்டு சென்றதும்- கடினப்பட்டு சேர்த்த சொத்துக்களை ஒரு நொடிக்குள் கடல் சூறையாடியதும்- வாழ்வுக்கு உறுதுணை என்று நம்பியவர்களின் இழப்பும்-சமூக வாழ்வுக்கு முக்கியமானது என்று கருதி தமது நேரம், பணம் முதலியவற்றை அர்ப்பணித்து சேர்த்த அரியபொருட்களின் இழப்பும், இவ்வாறு பாதிப்புக்கள் நீளும். இவை மனதிலே மீள மீள ஏற்படும்போது மனச்சோர்வு ஏற்படுத்த, பல பக்கவிளைவுகளை உருவாக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. இதற்கு தீர்வு காண்பது அவசயம். தீர்வு காணாவிட்டால் இன்று தாக்கங்களை உள-உடல் ரீதியில் உண்டுபண்ணும். அத்துடன் மருத்துவச் சிகிச்சை முறைகளையும் மேற்கொள்ள வேண்டிவரும். இங்கு மனோ ரீதியில் வலுவை ஏற்படுத்த பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆற்றுப்படுத்துனர்கள்- மற்றும் சமூக மக்களினதும் பொறுப்புணர்வு அவசியம். இதை மறந்து யாரும் செயற்படமுடியாது.

## நாம் ஒற்றையர் அல்ல

பொதுவாக துன்பங்கள் நம் வாழ்க்கையில் ஏற்படுகின்றபோது, ஏமாற்றத்தையும்- தவறான தீர்மானத்தையும்- தனியுணர்வையும்- கோபத்தினையும்- தற்கொலை முயற்சிகளையும் உண்டாக்கின்றது. இச் சந்தர்ப்பங்களில் மற்றவர்களின் ஒத்துழைப்பும் ஆதரவும் மிகவும் முக்கியம். ஒருவர் துன்பம் அடைகின்றபோது, "ஒருவரின் ஆதரவற்ற உணர்வே மிகப்பெரிய தீய சக்தி செயல்படுகிறது என்ற எண்ணத்தை அவரில் ஏற்படுத்துகின்றது" என்பார் சார்த்திராசியர் ஜோசப் பார்டன்.

பல்வேறு காரணங்களுக்காக மற்றவர்களின் ஒத்துழைப்பும் ஆதரவும் தேவை. நாம் முற்றிலும் தனித்து வாழ முடியாது. விலங்குகள் இயல்புணர்ச்சியினால் கூடி வாழ்கின்றதைக் காணலாம். யானைகள் தங்கள் குட்டிகளை பாதுகாத்துக் கொள்வதற்காக கூட்டம் கூட்டமாகச் செல்கின்றன. காகங்கள் உணவு உண்ணும்போது ஏனைய காகங்களை அழைத்து உண்ணுவதையும் காணலாம். இவ்வாறு விலங்குகள் அநேகம் கூடி வாழ்வதை பார்க்கும் போது மனிதர்கள் தனித்து ஒதுங்கி வாழ முடியாது. ஏனெனில் மனிதன் சமூகப்பிராணி. இதனால் மற்றவர்களின் உதவி அவனுக்குத் தேவை.

மனிதர்களிடம் வளர்ந்து வருகின்ற மிகப்பெரிய பிரச்சினை தனித்து வாழ்வது. தம்மிடம் இருக்கின்ற உணர்வுகளை பகிர்ந்து கொள்ளாது மரத்துப் போனவர்களாக இருப்பது. இதனால் துன்பம் ஏற்படும்போது அதனைத் தாங்க முடியாது வாழ்வே வெறுத்துப் போனது போன்ற உணர்வு ஏற்பட்டு, அதனை எதிர்கொண்டு வாழசக்தி அற்றவராக இருக்கின்றார்கள். தற்கொலை முயற்சிகளுக்கு காரணமும் இதுவே ஆகும்.

"நம்முடைய வாழ்க்கையையும் நம்முடைய நடவடிக்கைகளையும் ஆராய்ந்து பார்க்கும்போது, கிட்டத்தட்ட நம்முடைய எல்லா செயல்களும் ஆசைகளும் மற்றவர்களுடைய வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்திருப்பதை நாம் விரைவில் அறிந்து கொள்கின்றோம்... மற்றவர்கள் விளைவித்த உணவுப் பொருட்களை உட்கொள்கின்றோம். மற்றவர்கள் நெய்த ஆடைகளை அணிகிறோம். மற்றவர்கள் கட்டிய வீடுகளில் வசிக்கிறோம்... ஒரு நபர் அந்த நபராக இருப்பதற்கும், அந்த நபராக முக்கியத்துவம் பெற்றிருப்பதற்கும் தலையாய காரணம் அவருடைய ஆள்த்தன்மை அல்ல. ஆனால், அவர் மனித சமுதாயத்தின் பாகமாக இருப்பதே ஆகும். இந்த சமுதாயமே தொட்டில் முதல் சுடுகாடு வரை அவருடைய உலகம் மற்றும் ஆன்மீக வாழ்க்கை மீது செல்வாக்கு செலுத்துகிறது. இவ்வாறு பிரபல விஞ்ஞானி ஆல்பர்ட் ஜன்ஸ்டீன் கூறுகின்றார்.

ஒருவரின் பிறப்பில் இருந்து இறப்பு வரை, சமூகச் செல்வாக்கு அவரிடம் பிரதிபலிக்கின்றது. இதனால் சமூகத்தில் இருந்து ஒதுங்கி வாழமுடியாது. அத்துடன் சமூகமும் ஒரு தனிநபரை ஒதுக்கி வைக்கக்கூடாது. பல காரணங்களுக்காக சமூகம் சிலரை ஒதுக்கி வைக்கின்றது. இது ஆரோக்கியமற்ற தன்மையே ஆகும்.

ஒற்றையாக தனித்து வாழ்கின்ற போது, கருத்துப் பரிமாற யாரும் இருக்க மாட்டார்கள். அவர்களுக்குரிய பாதுகாப்பு கேள்விக்குறியாகவே இருக்கும். அவர்கள் இழைக்கின்ற குற்றங்களைக் கண்டித்து திருத்த யாருமில்லாதபடியால் குற்றங்கள் பெருக வாய்ப்பிருக்கின்றது. இன்னுமாக அவர்கள் செய்கின்ற நல்ல செயல்களைப் பாராட்டி தட்டிக்கொடுக்க யாரும் இல்லாத பெரும் அவலமும் காணப்படும்.

இத்தகைய நிலை புறச்சூழலில் இருந்து ஏற்படும்போது, தனிப்பட்ட வாழ்விலும் மனதை நெருடும் துன்பியல்பு அனுபவத்தை ஏற்படுத்துகின்றது. அவை அவர்கள் வாழ்வியலில் பல்வேறு மறையான உணர்வுகளையும் நடத்தைகளையும் தோற்றுவிக்கின்றது.

- பதட்டம்
- இலட்சியம் அற்றபோக்கு
- உணவில் நாட்டம் இன்மை
- பாலியல் உறவில் ஈடுபாடற்ற தன்மை
- எதிலும் ஆர்வமற்ற நிலை
- உடலில் சக்தி குறைந்தது போன்ற உணர்வும் அசதித் தன்மையும் காணப்படுதல்
- இழந்த உறவுகளை மீள மீள நினைத்து கவலை கொள்ளுதல்

இம்மாத 4ஆம் 5ஆம் தேதி வலம்புரியில் மீள் பிரசுரமான "26.12.2004 ஆழிப் பேர் அடுக்கு அலைகளின் கோரத் தாண்டவம" என்ற கட்டுரையின் ஆசிரியர் பேராசிரியர் நீ. மரியசேவியர் அடிகளின் பெயரும் கட்டுரை வெளிவந்த கலைமுகம் என்ற இதழின் பெயரும் இடம்பெறாமற் போனமைக்கு வருந்துகிறோம்.

(ஆ-ர்)

- பாதுகாப்பு அற்ற உணர்வு
- முன்பு விரும்பியவை தற்போது விரும்பாத ஒன்றாக இருத்தல்
- குடிபோதைக்கு அடிமையாதல்
- மற்றவர்களுடன் உரையாட விருப்பமின்மை
- தற்கொலை முயற்சி
- வாழ்வதற்கு என்று எந்தக் காரணமே இல்லை என்னும் நிலை
- எல்லாமே துண்டிக்கப்பட்ட அனுபவம்
- வெறுமை தனிமை நெருடும் சூழல்
- வாழ்வு வெறுத்தது போன்ற உணர்வு

இப்படிப்பட்ட மறையான தன்மை கொண்ட 'தனியன்களுக்கு உடனடியாக ஆற்றுப்படுத்தும் நடவடிக்கையில் இறங்கவேண்டும். இங்கு கார்கப்/ (Carkhvff) என்பவரின் சிகிச்சை அளிக்கும் மாதிரிவகை ஆற்றுப்படுத்தலுக்கு உறுதுணையாகும். "உடனிருந்து கவனித்தல், உதவி பெறுவதற்கு பதிலழித்தல்,- அவர்கள் எப்படி இருக்கிறார்கள் எப்படி இருக்க விரும்புகிறார்கள் என்ற அனுபவத்தை தனதாக்குதல், செயற்படத் தூண்டுதல்" என்பனவாகும்.

## ஒத்துப்போதல்!

துன்பங்களில் இருப்பவர்களுடன் ஒத்துப்போகும் தன்மையும் ஓர் ஆற்றுப்படுத்தும் வழிமுறையாகும். இதை யாரும் செய்ய முடியும. மற்றவர்களின் நிலையை, உணர்வுகளை, உள்நோக்கங்களை புரிந்துகொண்டு இரங்குவதே ஒத்துப்போகும் தன்மை என்று அகராதி கூறுகின்றது. மற்றவரின் துன்பநிலைகளை எம்முடன் பொருத்திப் பார்த்துக்கொள்ளுதல், அத்துன்பம் எமக்கு ஏற்பட்டால் எப்படி இருக்கும் என்ற நிலையை அடைதல் ஆகும். எப்போதும் ஒத்துப்போகுதல் என்பது மற்றவரின் சூழ்நிலையைப் புரிந்து கொள்ளுதல், அந்த சூழ்நிலை காரணமாக அவருக்கு ஏற்படும் உணர்ச்சிகளைப் புரிந்துகொள்ளுதல், மற்றவருக்கு ஏற்படும் அந்த வலியை புரிந்து கொண்டிருத்தல் ஆகும்.

"மற்றொருவரின் வேதனையை உங்களால் தணிக்க முடிந்த வரை நீங்கள் வாழ்ந்த வாழ்க்கை வீணாகவில்லை" என்பார் ஹெலன் கெல்லர். சுயநலமாக வாழ்கின்ற இந்த உலகத்தில் மற்றவர்களின் துன்பங்களைக் கண்டு தெரியாது இருப்பது சுலபம். மற்றவர்களுக்கு ஏற்படுகின்ற துன்பங்களை துடைக்க வாய்ப்புக் கிடைத்த போதும் நாம் அதனை உணராது இருந்திருக்கலாம். இதற்கு காரணம் மற்றவரின் தேவை என்னவென்பதை உணராத்தன்மை ஆகும்.

ஒத்துப்போகும் தன்மை எம்மிடம் இருந்தால் மற்றவரிடம் நிச்சயமாக கருணை- கரிசனை-அன்பு- வழிகாட்டல என்ற தன்மைகள் உருவாகும். பிறருடைய இடத்தில் எம்மை வைத்துப் பார்க்கத் தெரியவில்லை என்றால் நம்மைப்போல் பிறரை நேசிக்க முடியாது. பிறர் வாழ்வு மீது கரிசனை காட்டவும் முடியாது.

ஒத்துப்போகும் தன்மை எம்மிடம் இயல்பாக இருக்கும் ஒன்று. இவற்றை வளர்த்துக் கொள்வது அவசியம். எடுத்துக்காட்டாக ஒருவர் உடல் மெலிந்து- சீழ்வடியும் புண்களுடன் வீதியால் செல்லுகின்றபோது, எமது மனம் நெகிழ்ந்து போகின்றது. இத் தன்மையை வளர்த்துக் கொள்வது சிறப்பானது.

## உற்றுக் கேட்டல்

துன்பங்களும் துயரங்களும் ஒரு வரைமனோ ரீதியாக நிலைதடுமாற வைக்கின்றது. இங்கு அவர்களுடன் உரையாடுகின்றபோது, அவர்கள் கூறுகின்ற மொழிகளை உற்றுக் கேட்டல் வேண்டும்.

நாம் எந்தளவு மற்றவரிடம் கதைகளை உற்றுக் கேட்கின்றோமோ அந்தளவு அவரும் ஆர்வமாக தனது கருத்தியல்களை, உணர்ச்சிகளை கொட்டித் தீர்த்துவிடுவார். உற்றுக் கேட்பதன் மூலம் அவருக்கு நம்பிக்கை பிறக்கும். தன்மீது கரிசனை காட்ட ஒருவர் இருக்கின்றார் என்ற உணர்வு தோன்றும்.

பாதிக்கப்பட்டவர் தற்கொலை உணர்வுக்கான காரணம் எதுவாக இருந்தாலும் சரி, பொறுமையும், புரிந்து கொள்ளும் பக்குவமும், அனுதாபமும் மிகுந்த ஒருவரிடம் மனதிலுள்ளதைக் கொட்டி விடுவது மிகவும் நல்லது. இவர்களுக்கு செவி கொடுத்துக் கேட்கும் மனமுள்ள குடும்ப அங்கத்தவர்களும் நண்பர்களும் உதவலாம். அன்பும்- அனுதாபமும் காட்டுவதன் மூலம் உதவி செய்ய முடியும்.

நன்றாக செவிகொடுத்துக் கேட்கும் போது, அவரது நடத்தை உணர்ச்சிகள் என்பவற்றையும் கூர்ந்து கவனித்தல் வேண்டும். இன்னுமாக இங்கு கவனிக்க வேண்டிய விடயம் ஒருவர் தனது அந்தரங்க விடயங்களைக் கூட, உங்கள் மீது நம்பிக்கை கொண்டு கூறுகின்ற போது, நீங்கள் இரகசியம் பேணுவது அவசியம் ஆகும். மாறாக, அவர் கூறிய கருத்துக்களை- உணர்ச்சி வெளிப்பாடுகளை கேலிக்கூத்தாக மாற்றக்கூடாது. இவ்வாறு செய்தால் பாதிக்கப்பட்டவர் இன்னும் அதிகமாகப் பாதிக்கப்படுவார். இத்தன்மைகள் இன்று அதிகமாகிச் செல்வதினால் தான் யாரும் தங்கள் இரகசியங்களை யாரிடமும் சொல்லாது மனதுக்குள் பொத்தி வைத்திருக்கின்றார்கள். தனிமையுணர்வுக்கும் இதுவே காரணம். பொதுவாக பலர் இன்று தமது மனதுக்குள் இருக்கும் துன்பக்கனலை வெளிப்படுத்த முடியாது தவிக்கின்றார்கள் என்பது உண்மை. ஒருவர் தன்னை வெளிப்படுத்துவதற்கு மற்றவர் மீது நம்பிக்கை பிறக்க வேண்டும். இந்த நம்பிக்கைக்குரிய பாத்திரமாக நாம் மாற வேண்டும்.

(தொடரும்)

# ஒப்பற்ற பணிபுரியும்



ஹென்றி டுனான்ட்

# உலக செஞ்சிலுவைச் சங்கம்

**உலக செஞ்சிலுவை தினத்தை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரமாகிறது.**

**த.உதயசூரியன்**
**மாவட்ட கௌரவ செயலாளர்**

**1828**ஆம் ஆண்டு மே மாதம் 8ஆம் நாள் சுவிஸ் நாட்டில் பிறந்த ஹென்றி டுனான்ட் என்பவர் 1859இல் வடக்கு இத்தாலியில் சொல்பரினோ கிராமத்தில் பிரெஞ்சுப் படைக்கும் ஒஸ்திரிய படைக்கும் இடையில் நடந்த போரை நேரில் பார்த்து அங்கு காயப்பட்டவர்களுக்கு மருத்துவ உதவியை செய்ததோடு அவர்களது உறவினர்களுக்கு செய்தி அனுப்பவும் முன்வந்தார். தான் அனுபவித்த யுத்த அவலங்களைக் கருத்திற் கொண்டு, யுத்தத்தில் காயப்படுவோரைப் பாதுகாக்கவும், இயற்கை அனர்த்தங்களினால் அல்லற்படுபவர்களுக்கு கைகொடுக்கவும் ஆர்வமுற்றுத் தனிமனித முயற்சியினால முதலில் சிறியதொரு குழுவை உருவாக்கிப் பணியாற்றத் தொடங்கினார். ஹென்றி டுனான்ட் பிறந்த தினத்தையே சர்வதேச செஞ்சிலுவைத் தினமாகக் கொண்டாடி வருகிறார்கள்.

சாதாரணமான சூழ்நிலைகளில், மனிதன் தான் வழமையாக வாழ்ந்துவரும ஒழுங்கமைக்கப்பட்ட சமூகத்தில் சட்டங்களாற் பாதுகாக்கப்படுகின்றான். தன் சீவியத்திற்கு வேண்டிய வாழ்வாதாரங்களை தன் அருகிலேயே கண்டுகொள்கின்றான். ஆனால் சமூகம் தனது நியாயமான பணிக்கேற்ற நிலையிலிருந்து நிலை தடுமாறி சட்டங்கள் மீறப்பட்டு, மனிதனின் இயற்கைச் சூழல் குழப்பத்திற்குட்படுத்தப்பட்டு, அவனது பாதுகாப்பும், சுகாதாரமும், சீவியமும் பயமுறுத்தப்படும் சூழ்நிலைகள், ஆயுத மேந்திய மோதல்கள், இயற்கையழிவுகள் போன்றவை ஏற்படும் சந்தர்ப்பங்களில் பாதிக்கப்பட்டோருக்கு உதவியும் பாதுகாப்பும வழங்கச் செஞ்சிலுவை பாடுபடுகிறது.

செஞ்சிலுவை அமைப்பின் தொடக்கம் உண்மையில். அடக்கமானதும், சிறிய அளவினதாகவுமே அமைந்தது. ஐந்து பேரைக்கொண்ட ஒரு குழுவினர் போரில் காயமுற்றோரை பாதுகாப்பதையும், அவர்களுக்கு வேண்டிய பொருள் உதவியைச் செய்வதையும் நோக்கமாகக் கொண்டு செயற்பட்டனர். தற்போது இவ்வியக்கம் 130 மில்லியன் அங்கத்தவா களையும், 181தேசிய செஞ்சிலுவைச் செம்பிறைச் சங்கங்களையும், அதன் உலகக் கூட்டிணைப்பான செஞ்சிலுவை, செம்பிறைச் சங்கங்களின் இணைக் குழுவையும் கொண்ட உலகளாவிய ஓர் இயக்கமாக வளர்ந்து செயற்படுகின்றது.

1949ஆம் ஆண்டு செய்யப்பட்ட நான்கு ஜெனீவா சாசனங்கள் கீழ்க்காணும வகையினரைப் பாதுகாக்க உதவுகின்றன. இச்சாசனங்களை ஏற்று 178 நாடுகள் ஒப்பமிட்டுள்ளன. இலங்கையும் அதனுள் ஒன்றாகும்.

(1) களத்தில் காயமுற்றவர்கள் அல்லது சுகவீனம் உற்றவர்கள்.
(2) கடலில் காயமுற்றவர்கள் அல்லது சுகவீனமுற்ற அல்லது தத்தளிக்கின்ற வீரர்கள்.
(3) போர்க் கைதிகள்.
(4) ஆயுதப்பேரரில் சிக்கிய குடிமக்கள்.

செஞ்சிலுவை இயக்கமானது மூன்று பிரிவினர்களைக் கொண்டுள்ளது. அவை யாவன:-

சர்வதேச செஞ்சிலுவைக் குழு, செஞ்சிலுவை செம்பிறைச் சங்கங்களின் சம்மேளனம், தேசிய செஞ்சிலுவை செம்பிறைச் சங்கங்கள் என்பனவாகும்.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் எமது நாட்டில் தேசிய சங்கமாக விளங்கி 1936ஆம் ஆண்டில் இருந்து தற்பொழுது வரை சேவையாற்றி வருகிறது. இதன் தலைமையகம் கொழும்பில் உள்ளது.

யுத்த மேகத்தில் சிக்கி அல்லற்பட்ட மக்களுக்கு தேவையறிந்து சேவையாற்ற இதனால் முடிந்தது. யாப்பு ரீதியாக பிரிவுகள்தோறும் செஞ்சிலுவைச் சங்க செயற்பாடுகளைச் செய்ய வழிவகுக்கப்பட்டுள்ளது. மேலும் கிராம மட்டங்களிலேயே செஞ்சிலுவை அமைப்பைத் தோற்றிவித்து செயற்படவும், அங்கத்தவர்களை அதிகமாக இணைக்கவும் பூகோள ரீதியாக அலகுகளை ஸ்தாபிககவும் யாப்புமூலம் அங்கீகாரம் பெறப்பட்டு செயற்பட ஆரம்பிக்கப்பட்டுள்ளது. யாழ். மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் 14 பிரதேச செயலகப் பிரிவுகள் ரீதியாகச் செஞ்சிலுவைக் காரியாலயம் அமைத்துச் செயற்படுத்தப்படுகிறது.

செஞ்சிலுவை இயககத்தினால் ஆற்றப்படும் சேவைகளிற்கும், நிவாரண வழியோகங்களிற்கும், வருடம் ஒன்றிற்கு பல கோடிக்கணக்கான பணம் திட்டமிடப்பட்டு செலவிடப்படுகின்றது. இந்த உதவிகள் உலகில் பல பாகங்களிலும் வாழ்கின்ற எண்ணிலடங்கா மக்களுக்குப் போர்ச் சூழலிலும், சமாதான வேளைகளிலும் கூட அவர்களின் அருந்தற்பாடுகளைக் குறைக்கப் பயன்படுத்தப்படுகின்றன. அண்மையில் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்குப் பல்வேறு உதவிகளை வழங்குவதில் செஞ்சிலுவை ஈடுபட்டு வருகின்றது.

செஞ்சிலுவை, அதன் மனிதநல இலட்சியங்களால் உந்தப்பெற்று வழி நடத்தப்படுகிறது. அதன் செயல்கள், நடவடிக்கைகள் இதற்கான திட்டவட்டமான வெளிப்பாடாக அமைகின்றன. இவ்வியக்கம் தான் ஒரு குறிப்பிட்ட காலத்துக்கோ, இனத்துக்கோ, மதத்திற்கோ, பண்பாட்டிற்கோ உரியதன்று என்பதைக் காட்டும முறையில் உலகம் முழுவதும் விரிந்து பரந்து கிடக்கின்றது.

செஞ்சிலுவை அமைப்புக்கள் மனிதாபிமானம், பாரபட்சமின்மை, நடுவு நிலைமை, சுயாதீனம், தொண்டர்சேவை, ஒற்றுமை, உலகளாவிய தன்மை ஆகிய ஏழு முக்கிய அடிப்படைக் கொள்கைகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது.

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்.மாவட்டக் கிளையினர் செய்யும் பணிகள் சில பின்வருமாறு:

1.தேசிய வைபவங்கள், சமய மற்றும் விளையாட்டு நிகழ்வுகளின்போது முதலுதவி அளித்தலும், அரசாங்க, தனியார் செஞ்சிலுவைச் சங்க அங்கத்தவர்கள், தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோருக்கு முதலுதவிப் பயிற்சியளித்தலும்.
2.அனர்த்தங்கள் நடைபெறும்போது உதவுதல்.
3.அவசர அம்புலன்ஸ் சேவை, நடமாடும் மருத்துவ சேவை.
4.காணாமல் போனோரைத் தேடல்.
5.நிவாரண உதவிகளை வழங்குதல்.
6.இரத்ததான நடவடிக்கை.
7.ஆரம்ப சுகாதார சேவை.
8.சிரமதானப் பணிகள்.
9.சுயதொழிலுக்கான பயிற்சி வழங்கலும் தொடர் நடவடிக்கைகளும்.

இவற்றைவிட பாடசாலை மட்டத்திலான சுகாதாரமும் உளவியலும் திட்டம் டென்மார்க் செஞ்சிலுவைச் சங்கத்தின நிதியுதவியுடன் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் இருந்து 2800 மாணவர்கள் பயனடையக்கூடிய முறையில் செயற்படுத்தப்படுகிறது.

''சுனாமி'' இயற்கை அனர்த்தம் ஏற்பட்ட நிமிடத்திலிருந்து செஞ்சிலுவைச் சங்க நிர்வாகத்தினர், அங்கத்தவர்கள் விசேடமாக தொண்டர்கள் மிகுந்த அர்ப்பணிப்புடன் செயலாற்றிவருகின்றனர். பிரிவு செஞ்சிலுவைச் சங்கத்தினர் ஆற்றிய சேவைகள் பாராட்டுக்குரியது. இறந்தவர்களின் உடல்களை அற்றுவதிலிருந்து சகலவிதமான நிவாரண உதவிகளிலும் இச்சங்கம் ஈடுபட்டு வருகின்றது. இதற்காக தேசிய தலைமையகம் பல உதவிகளை வழங்கி வருகின்றது. சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் தன்னுடைய பங்களிப்பை வழங்கத் தயங்கவில்லை. அவர்கள் உரிய நேரத்தில் எம்முடன் இணைந்தும, தனித்தும் பல சேவைகளை ஆற்றி வருவதும் குறிப்பிடத்தக்கது.

'சுனாமி' அனர்ததத்திற்குப் பின்னர் ஏறத்தாழ 30 பிறநாட்டு சகோதர செஞ்சிலுவைச் சங்கங்கள் இந்நாட்டில் காலடி பதித்து தேசிய சங்கமாகிய இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்துடன் இணைந்து செயற்பட முன்வந்துள்ளனர்.

நலிந்தோருக்கு உதவ எமக்கு தாராளமாக உதவுங்கள்.

---

# பிரதமர் மன்மோகன் சிங் இன்று ரஷ்யா பயணம்

(புதுடில்லி)

ஜேர்மனியை சோவியத் யூனியன் வெற்றி கண்ட விழா ரஷ்யாவில் நடக்கிறது. அதில் புஷ், கொபி அனான் உட்பட 60 நாட்டுத் தலைவர்கள் கலந்து கொள்கிறார்கள். அதில் பங்கேற்க பிரதமர் மன்மோகன் சிங் இன்று ரஷ்யா புறப்படுகிறார்.

2ஆவது உலகப் போரில் நாஜிகளின் ஜேர்மனியை அப்போதைய சோவியத் யூனியன் தோற்கடித்து வெற்றி பெற்றது. அந்த வெற்றியின் 60ஆவது ஆண்டு விழா தற்போதைய ரஷ்யத் தலைநகர் மாஸ்கோவில் இன்றுமுதல் 3நாள் நடக்கிறது. ஜேர்மன் நாஜி படைகளிடம் சரணடைந்த நாள் மே 8ஆம் திகதியாகும்.

இந்த 3 நாள் விழாவில் இந்திய பிரதமர் மன்மோகன் சிங், அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ், ஐ.நா.சபை பொதுச் செயலாளர் கொபி அனான், சீன பிரதமர் ஹுஜிண்டா, பிரான்ஸ் அதிபர் ஜேக்கஸ் சிராக், ஜேர்மனி அதிபர் ஜெரால்டு ஷிரோபர், இத்தாலி பிரதமர் சில்வியோ உட்பட 60 நாடுகளின் தலைவர்கள் கலந்து கொள்கிறார்கள்.

அவர்கள் ஜேர்மனியுடன் நடந்த போரில் உயிரிழந்த ரஷ்ய வீரர்களின் நினைவு சின்னங்களில் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்துவார்கள். மற்றும் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வார்கள்.

இதேவேளை நாளை திங்கட்கிழமை மாஸ்கோவில் உள்ள செஞ்சதுக்கத்தில் ரஷ்ய முப்படைகளின் பிரமாண்ட அணி வகுப்பு நடக்கும். அதை ரஷ்ய அதிபர் புடின் உட்பட 60 நாட்டுத் தலைவர்கள் பார்வையிடுகிறார்கள்.

ரஷ்ய வெற்றி விழாவில் கலந்து கொள்ள பிரதமர் மன்மோகன் சிங் தனி விமானத்தில் இன்று புறப்பட்டு செல்கிறார். அவருடன் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே.நாராயணன், பிரதமரின் முதன்மை செயலாளர் டி.கே.ஏ.நாயர், வெளியுறவு செயலாளர் ஷியாம் சரண் உட்பட உயர் அதிகாரிகள் அடங்கிய குழுவும் செல்கிறது.

மாஸ்கோவில் அதிபர் புடினுடன் பிரதமர் மன்மோகன் சிங் இருதரப்பு உறவு பற்றி பேச்சுவார்த்தை நடத்துகிறார். இராணுவம், பாதுகாப்பு, எரிசக்தி, வர்த்தக பொருளாதாரம், தகவல் தொழில் நுட்பம் போன்ற துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்துவது பற்றி இருவரும் பேசுவார்கள்.

ரஷ்யா இந்தியாவுக்கு ஏற்கனவே வழங்கிய இராணுவ சாதனங்களுக்கு உதிரிப்பாகங்கள் கொடுக்க செய்து கொள்ளப்பட்ட ஒபபந்தங்களின் முன்னேற்றம் பற்றி இருவரும் விவாதிப்பார்கள்.

மன்மோகன்சிங்கும், புடினும் இந்த ஆண்டு கடைசியில் தனியாக சந்தித்துப் பேச இருக்கிறார்கள். அப்போது முக்கிய ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்படும். (க)

---

# எலக்ட்ரிக் காரின் உலக சாதனை

மின்சாரத்தால் ஓடும் எலக்ட்ரிக் கார் எவ்வளவு வேகமாக ஓடமுடியும் என்பதில் இப்போதைய உலக சாதனையாகத் திகழ்வது மணிக்கு 245 மைல் ஆகும்.

இந்தச் சாதனையைப் படைத்திருப்பது அமெரிக்காவைச் சேர்ந்த 'ஒளிட லைட்னிங்' என்ற பெயருள்ள கார் ஆகும்.

1999இல் இந்தச் சாதனை படைக்கப்பட்டது. இப்போது இதை முறியடித்து மணிக்கு 300 மைல் வேகத்தில் செல்லும் புதிய சாதனையை உருவாக்க இங்கிலாந்து விஞ்ஞானிகள் முயன்று வருகின்றனர்.

இந்த எலக்ட்ரிக் காரில் 2 மோட்டார்கள் உண்டு. கியர்கள் கிடையாது.



இதில் 52 லிட் அமிலம் பேட்டரிகள் கொண்ட 4 பேக் அமைந்திருக்கும். அவை மோட்டார்களை இயக்கும். இநதப் புதிய வேக சாதனை முயற்சி அமெரிக்காவின் நெவடா நகரில் நடக்கவுள்ளது. (க)

---

# தேர்தல் ஆணைய அதிகாரியை 'கேரோ' செய்த அ.தி.மு.க வினர்

(காஞ்சிபுரம்)

காஞ்சிபுரம் தொகுதியில் அ.தி.மு.க. 'கட் அவுட்'களை அகற்ற நடவடிக்கை எடுக்காத தேர்தல் அதிகாரி, மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் உள்ளிட்டோருக்கு தேர்தல் ஆணைய அதிகாரி கண்டனம் தெரிவித்துள்ளார்.

தேர்தல் நடத்தை விதிகளை மீறுபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கமபடி மாவட்ட நிர்வாகத்துக்கு உத்தரவிட்டிருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

இடைத் தேர்தல் நடைபெறவுள்ள காஞ்சிபுரம் தொகுதியில் தேர்தல் ஆணைய சிறப்புப் பார்வையாளர் கே.சி. ராவ் இரண்டாம் முறையாக நேற்றுமுன்தினம் ஆய்வு மேற்கொண்டார். காஞ்சி வட்டாச்சியர் அலுவலகத்துக்கு வந்த அவர் நேற்றுமுன்தினம் தான் அகற்றச் சொன்ன அ.தி.மு.க. 'கட் அவுட்'கள் எங்கே என்றுதேர்தல் அதிகாரி அன்பழகனிடம் செல்போன் மூலம் விசாரணை நடத்தினார். ஆனால் அவர் சரியான பதில் அளிக்கததால் 'மிகவும் துரதிஷடவசமானது' என ராவ் கண்டனம் தெரிவித்தார்.

இதையடுத்துச் செய்தியாளர்களிடம் பேசிய ராவ் தேர்தல் நடத்தை விதிகளை மீறுகிறவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கும் படி மாவட்ட நிர்வாகத்துக்கு உத்தரவிட்டிருப்பதாகக் கூறினார்.

இதையடுத்து கும்மிடிப்பூண்டித் தொகு திக்கு வந்த ராவ், விதிகளுக்குப் புறம்பாகக் கட்டப்பட்டிருந்த 'பனர்கள்' உள்ளிட்டவற்றை அகற்றுமாறு கட்டளையிட்டார். அப்பொழுது அ.தி.மு.கவினர் அவரை 'கேரோ' செய்ததால் பரபரப்பு ஏற்பட்டது. (து)

---

WORLD NEWS உலக தரிசனம்

# நேபாள முன்னாள் பிரதமர் மீது ஊழல்குற்றச்சாட்டு

அரசுப் பணத்தை முறைகேடு செய்ததாக நேபாள முன்னாள் பிரதமர் ஷேர் பகதூர் தேவ்பா மீது மன்னர் ஞானேந்திராவால் நியமிக்கப்பட்டுள்ள ஊழல் தடுப்புக் கமிஷன் குற்றஞ்சாட்டியுள்ளது.

இவ்வழக்கில் பிணையில் விடுவிக்க ரூ.25 இலட்சத்தை செலுத்த வேண்டும என்றும் கமிஷன் கூறியுள்ளது. ஆனால் அதை ஏற்க தேவ்பா மறுத்துள்ளார்.

நேபாளத்தில் நெருக்கடி நிலையை அறிவித்த மன்னர், ஊழல் தடுப்புக் கமிஷனை அமைத்தார். தேவ்பா உள்ளிட்டோர் மீது ஊழல் புகார்களைச் சுமத்தி கமிஷன் கைது செய்தது. (க)

# 1983 ஆம் ஆண்டு நிகழ்ந்த கலவரம் விசாரணை செய்ய 59 பேர் நியமனம்

(கொழும்பு)

இலங்கையில் 1983 ஆம் ஆண்டு நிகழ்ந்த தமிழருக்கு எதிரான கலவரம் குறித்து விசாரிக்க அரசு 59 ஆய்வாளர்களை நியமித்துள்ளது.

1983 ஆம் ஆண்டு இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த 13 இராணுவவீரர்கள் விடுதலைப்புலிகளால் கொல்லப்பட்டதை அடுத்து தமிழருக்கு எதிரான இனக்கலவரம் மூண்டது.இதுதான் உள்நாட்டுப் போருக்கு பிரதான காரணமாக அமைந்தது.இந்த கலவரத்தை அடுத்து இலங்கையில் இருந்து 80 ஆயிரம் தமிழர்கள் அகதிகளாக இந்தியா மற்றும் மேற்கத்திய நாடுகளுக்குச் சென்றனர். ஏராளமான உயிரிழப்புகளும் ஏற்பட்டன.

இருபது ஆண்டுகளுக்கு முந்தைய இந்த கலவரம் குறித்த உண்மையை கண்டறிய மூன்று நபர் கொண்ட விசாரணை குழுவை இலங்கை அரசு ஏற்கனவே நியமித்தது.

இதற்கமைய கலவரத்தில் பாதிக்கப்பட்ட 939 பேருக்கு சுமார் 32 கோடி ரூபா நஷ்டஈடு வழங்கக் குழு பரிந்துரைத்தது.இந்தத் தொகையை வழங்க ஒப்புக்கொண்ட அரசு தமிழர்களுக்கு எதிரான இக் கலவரத்துக்கு என்ன காரணங்கள் என்பது பற்றி விசாரிக்க 59ஆய்வாளர்களைக் கொண்ட குழுவை தற்போது நியமித்துள்ளது.

நஷ்ட ஈடு கோரி இன்னமும் 4ஆயிரத்து 622 விண்ணப்பங்கள் நிலுவையில் உள்ள நிலையில் புதிய விசாரணைக்கு அரசு உத்தரவிட்டிருப்பதன் மூலம் நஷ்ட ஈட்டு கோரிக்கைகள் உண்மையானது தானா என்பதை கண்டறியமுடியும் என்று விசாரணைக்குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது. (க)

# ஊடகவியலாளர்களுக்கு பாதுகாப்பு வழங்க ஐ.ம.சுதந்திரமுன்னனி அரசு தவறிவிட்டது

## ராஜித சேனாரட்ண எம்.பி. குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஊடகவியலாளர் சிவராம் படுகொலை செய்வதற்கு முன்னரே அவர் தமிழீழவிடுதலைப்புலிகளுடன் தொடர்புடையவர் என பறைசாற்றுவதற்கான பின்னணி ஏற்படுத்தப்பட்டதாக பாராளுமன்ற உறுப்பின் டாக்டர் ராஜித சேனாரட்ண தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர் சிவராம் படுகொலை தொடர்பாக பாராளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தின் ஆட்சிக்காலத்தில் ஊடகவியலாளர்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசின் ஆட்சிக்காலத்தில் ஊடகவியலாளர் படுகொலை செய்யப்படுவதுடன், அவர்களுக்கு பெரும் அச்சுறுத்தலும் ஏற்பட்டுள்ளது எனத் தெரிவித்தார்.

**விமல்வீரவன்ஸ**

இவ் விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய விமல்வீரவன்ஸ நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவரும் இக் காலகட்டத்தில் ஊடகவியலாளர் சிவராம் கொலை செய்யப்பட்டமையை அனுமதிக்க முடியாதென தெரிவித்தார்.

சிவராமின் அரசியல்கொள்கை ஏதுவாகவிருந்தாலும் அவரின் கொலை தொடர்பாக அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும்.

சிவராம் கடத்திச் செல்லப்பட்ட வேளையில் சிவராமுடன் இருந்தவர்கள் பொலிஸாருக்கு அறிவிக்காமல் இருந்தமை சிக்கலான விடயம்.அது மட்டுமன்றி இக் கொலை குறித்து ஆராய்ந்து பார்க்கும்போது அரசாங்கத்தையும் ஜே.வி.பியையும் சிரமத்துக்கு உள்ளாக்கும் செயலாக கருதவேண்டியுள்ளது என்றார்.

**மைக்கல் பெரேரா**

ஐ.தே.கட்சி பாராளுமன்ற உறுப்பினர் மைக்கல் பெரேரா உரையாற்றுகையில்கடத்திசெல்லப்பட்ட மாமனிதர் சிவராமின் சடலம் அதியுயர் பாதுகாப்பு வலயத்திலேயே கண்டெடுக்கப்பட்டுள்ளது.

இதனால் அதியுயர் பாதுகாப்பு வலயத்தில்வைத்து அரசாங்கத்தால் அன்றி வேறுயாரால் சிவராமை கொலை செய்யமுடியும் என்று கேள்வி எழுப்பினார்.

அரசாங்கத்தின் மீது குறை சொல்லவோ அரசை குற்றத்திலிருந்து மறைக்கவோ முடியாது. ஆனால் இந்தகொலைச் சம்பவத்தினால் பாராளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்புக்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதென்று தெரிவித்தார்.

**மங்களசமரவீர**

ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர அங்கு உரையாற்றுகையில், சிவராமின் கொலையுடன் தொடர்புடையவர்கள் மீதான விசாரணைகளை எந்த விதத்திலும் மறைப்பதற்கு நாம் (அரசு) இடமளிக்கப்போவதில்லை இது தொடர்பான தகவல்களை வெளியிடுவது ஊடக சுதந்திரத்தை வலுப்படுத்துவதற்கு அத்தியாவசியமானது.

ஆனால் இந்தக்கொலைக்கு அரசாங்கம் தான் பொறுப்பு என்ற குற்றச்சாட்டை அரசு மறுத்தால் கொலையுடன் தொடர்புடையவர்களை மிகவிரைவில் கண்டுபிடிக்க முடியுமென்று தெரிவித்தார்.

**சுரேஷ்பிரேமச்சந்திரன**

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் உரையாற்றுகையில், அமைச்சர் மங்களசமரவீர உரையாற்றிக்கொண்டிருக்கும்போது சுரேஸ்பிரேமச்சந்திரன் குறுக்கிட்டு பேசினார்.

யாழ்ப்பாணத்தில் கொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் நிமலராஜனின் கொலையுடன் தொடர்புடைய நபர் ஒருவர் பிரிட்டனில் அரசியல் தஞ்சம் கோரியுள்ளார்.இவ்வாறான ஒரு நிலையில் சிவராமின் கொலை தொடர்பான விசாரணைகளில் நம்பிக்கைவைக்க முடியாது.இதேவேளை சிவராமின் படுகொலை தொடர்பாக அரசாங்கம் உரியநடவடிக்கை எடுக்காவிட்டால் சர்வதேசரீதியாக அழுத்தம் கொடுக்கப்போவதாக அவர் மேலும் தெரிவித்தார். (க-8)

# எந்தச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டது? பொலிஸாரிடம் அறிக்கை கோருகிறார் நீதிபதி

(மன்னார்)

தமிழர் புனர்வாழ்வுக்கழக அதிகாரி ஒருவரிடமிருந்து உயிலங்குளம் சோதனைச் சாவடியில் கைப்பற்றப்பட்ட ஒரு கோடி 89 இலட்சம் ரூபா ரொக்கப் பணமும, ஜீப்வண்டியும் எந்தசட்டத்தின் கீழ் விசாரணைக்காக தடுத்து வைக்கப்பட்டுள்ளது என்பதை நீதி மன்றத்துக்கு அறிவிக்க வேண்டுமென்று மன்னார் மாவட்ட நீதிபதி எம்.எம்.அப்துல்லா நேற்றுமுன்தினம் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

கடந்த முதலாம் திகதி உயிலங்குளம் இராணுவச் சோதனைச்சாவடியூடாக இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வந்த தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் வாகனம் சோதனையிடப்பட்டபோது பெருமளவு ரொக்கப்பணம் இருந்ததைக் கண்ட பொலிஸார், வாகன சாரதியையும், தமிழர்புனர்வாழ்வுக் கழகத்தின் அதிகாரி ஒருவரையும் கைது செய்து விசாரணைக்கு உட்படுத்தினார்கள்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் புனரமைப்புப் பணிகளுக்காக இந்த நிதி கொண்டு செல்லப்படுவதைத் தெரிவித்து அதற்கான ஆவணங்களும் சமர்ப்பிக்கப்பட்டன.

இதனையடுத்து கைது செய்யப்பட்ட இருவரையும் பிணையில் செல்ல அனுமதித்தீ பொலிஸார், மேற்படி ஜீப் வண்டி, அம்புலன்ஸ் வாகன வகையின் கீழ் பதிவு செய்யப்பட்டிருப்பதாகக் கூறி வாகனத்தை மேல் விசாரணைக்காக தடுத்து வைத்தார்கள்.

கைப்பற்றப்பட்ட பணமும் நீதிமன்ற அனுமதியோடு தடுத்து வைக்கப்பட்டுள்ளது. இந்தப் பணத்தினை விடுவிக்க வேண்டுமெனக் கோரி தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் சார்பில் நேற்றுமுன்தினம் மன்னார் மாவட்ட நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் புலனாய்வுப் பொலிஸ் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் இது தொடர்பான புலனாய்வு அறிக்கையையும் சட்டமா அதிபரின் பணிப்புரையையும் எதிர்நோக்கியிருப்பதாகவும் தெரிவித்த பொலிஸார், பணத்தினை விடுப்பதற்கு ஆட்சேபனை தெரிவித்தனர்.

இதனையடுத்து மேல்விசாரணை அறிக்கையை வரும் திங்கட்கிழமை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டுமெனப் பொலிஸாருக்கு உத்தரவிட்ட நீதிபதி, விசாரணையினை வரும் திங்கட்கிழமைக்கு ஒத்திவைத்தார்.

இதேவேளை, அம்புலன்ஸ் வாகனவகையில் பதிவு செய்யப்பட்டிருப்பதாகக் தெரிவித்து நேற்றுமுன்தினம் உயிலங்குளம் இராணுவச் சோதனைச் சாவடியில் கைப்பற்றப்பட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் இன்னுமொரு ஜீப் வண்டியையும் விசாரணைகளுக்காகத் தாங்கள் தடுத்து வைத்துள்ளதாக மன்னார் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த வாகனத்தில் பிரயாணம் செய்த சாரதி உப்பட மூவரையும் பிணையில் செல்ல அனுமதித்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (து-4)


# வலம்புரி
## பிரதேச செய்தியாளர்கள் (பயிலுநர்கள்) பதவிக்கு ஆட்சேர்த்தல்

பின்வரும் பிரதேசங்களில் பிரதேச செய்தியாளர்களை (பயிலுநர்கள்) நியமிப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

☛ பத்திரிகைத்துறையில் ஆர்வமுள்ளவர்களும் க.பொ.த.(சா/த) இல் சித்தியடைந்தவர்களும் இப்பதவிக்கு விண்ணப்பிக்கலாம்.

☛ பயிலுநர்கள் தரத்தில் 3 மாதங்கள் ஈடுபடுத்தப்படுவர். இக் காலத்தில் சேவையில் திருப்தியும் ஒழுங்கும் ஆர்வமும் காணப்படுமிடத்து அவர்கள் நிரந்தரமாக்கப்படுவர்.

☛ பயிலுநர்களாகத் தெரிவு செய்யப்படுபவர்கள் நிறுவனத்துடன் பிணை ஒப்பந்தம் செய்து கொள்ளல் வேண்டும்.

☛ குறித்த பிரதேசத்தில் நிரந்தரமாக வசிப்பவர்கள் மட்டுமே அந்தந்தப் பிரதேச செய்தியாளர் பதவிக்கு விண்ணப்பிக்க முடியும்.

☛ இலங்கையிலிருந்து வெளிவரும் வேறு பத்திரிகைகளிலும் ஊடகங்களிலும் செய்தியாளர்களாகப் பணியாற்றுபவர்கள் இப்பதவிக்கு விண்ணப்பிக்கமுடியாது.

☛ ஏற்கனவே பத்திரிகைத் துறையில் அனுபவமுள்ளவர்கள் விண்ணப்பிப்பின் அவர்கள் நிரந்தர செய்தியாளர்களாக உள்ளீர்க்கப்படுவர்.

தகுதியானவர்கள் முழுப் பெயர் ,நிரந்தர முகவரி, தபால் முகவரி, பால், பிறந்த தேதி, தே.அ.அ. இல; விவாக நிலை ,தொழில் புரியும் இடம் ,பதவி (இருப்பின் ) கிராம சேவையாளர் பிரிவு, பிரதேச செயலாளர் பிரிவு, பிரதேசசபைப் பிரிவு, தொலைபேசி இலக்கம்(இருப்பின்), கல்வித்தகைமை என்பவை உள்ளிட்டதாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை,

*பிரதம ஆசிரியர் வலம்புரி,*
*15 வெள்ளாந் தெரு,*
*வண்ணார் பண்ணை*
*யாழ்ப்பாணம்.*

என்ற முகவரிக்கு 31.05.2005 ஆம் தேதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக நேரிலோ அன்றேல் தபால் மூலமோ அனுப்பி வைக்கவும்.

*- நிர்வாக உத்தியோகத்தர்.*

## பிரதேச செய்தியாளர் (பயிலுநர்) தெரிவுக்கான பிரதேசங்கள்

### வலிகாமம்

திருநெல்வேலி
நல்லூர்
கந்தர்மடம்
கோண்டாவில்
கொக்குவில்
மானிப்பாய்
உரும்பிராய்
சண்டிலிப்பாய்
சங்கானை
சித்தன்கேணி
அராலி
வட்டுக்கோட்டை
மாதகல்
பண்டத்தரிப்பு
சில்லாலை
தாவடி
இணுவில்
மருதனார்மடம்
சுன்னாகம்
மல்லாகம்
தெல்லிப்பழை
நாவாந்துறை
கொழும்புத்துறை
பிரசையூர்
வண்ணார்பண்ணை
கொட்டடி
நாயன்மார்கட்டு
கல்வியங்காடு
நீர்வேலி
சிறுப்பிட்டி
ஆவரங்கால்
அச்சுவேலி
இடைக்காடு
புத்தூர்
ஊரெழு
அச்செழு
புன்னாலைக்கட்டுவன்
குப்பிளான்
ஓட்டுமடம்
நீராவியடி
அத்தியடி
அரியாலை

### வடமராட்சி

கரவெட்டி
கரணவாய்
நெல்லியடி
நவிண்டில்
வல்வெட்டி
வல்வெட்டித்துறை
தொண்டைமானாறு
துன்னாலை
அல்வாய்
வியாபாரிமூலை
நாகர்கோவில்
செம்பியன்பற்று
மணற்காடு
கொற்றாவத்தை
பொலிகண்டி

### தென்மராட்சி

நாவற்குழி
மறவன்புலோ
கைதடி
நுணாவில்
சாவகச்சேரி
மீசாலை
மட்டுவில்
சரசாலை
கொடிகாமம்
வரணி
மிருசுவில்
எழுதுமட்டுவாள்
முகமாலை
பளை

### தீவகம்

மண்டைதீவு
ஊர்காவற்றுறை
வேலணை
புங்குடுதீவு
அனலைதீவு
எழுவைதீவு
சுருவில்
நயினாதீவு

### வன்னி

கிளிநொச்சி
வட்டக்கச்சி
முருகண்டி
மல்லாவி
மாங்குளம்
வவுனிக்குளம்
கனகராயன் குளம்
நெடுங்கேணி
புளியங்குளம்
முள்ளியவளை
புதுக்குடியிருப்பு
விசுவமடு

ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறை
தான்சாந் துயரம் தரும் - குறள்

வலம்புரி

# நெருக்கடிக்குள் அரசாங்கம்

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்காவின் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கம் அலையில் அகப்பட்ட துரும்புபோல அல்லாடித் தத்தளித்துக் கொண்டிருக்கிறது.

அரசியல் வெறுமைக்குள் ஆட்சிநகர்வென்பது இறுக்கமான நெருக்குவாரத்தையே அரசிற்கு ஏற்படுத்தும். அத்தகைய நெருக்குவாரத்தின் உச்ச நிலையில் கூட்டமைப்பு அரசாங்கம் தத்தளிக்கின்றது.

சந்திரிகா அரசு நெருக்கடி நிலையைச்சந்திப்பதற்கு அவர் சேர்த்துக்கொண்ட ஜே.வி.பி கூட்டணிதான் முதன்மைக்காரணமாக அமைகிறது.

ஆட்சி அமைக்க எந்தப்பேயுடனும் கூட்டுச்சேருவேன் என்று சந்திரிகா அன்று செருக்கு மிடுக்குடன் தெரிவித்திருந்தார். ஆனால் இன்று அவர் அக்கூட்டணியை அமைத்ததன் பிரதிபலனை அறுவடைசெய்து கொண்டிருக்கிறார்.

நாட்டின் அரசாங்கம் அதிஉயர் பொறுப்புமிக்க மக்கள் சேவையையும், அதன் நிர்வாகக்கட்டமைப்பையும் செம்மையாக நெறிப்படுத்த வேண்டும். ஆனால் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கம் தங்களுக்குள் குத்துவெட்டுப்பட்டுக் கொண்டிருக்கிறதே தவிர, மக்களின் நலன்குறித்தோ தேசியப்பிரச்சினை குறித்தோ எதுவித முடிவையும் அறுதியிட முடியாத துர்ப்பாக்கிய நிலையில் ஊசலாடிக் கொண்டிருக்கிறது.

ஆழிப்பேரலை மீள் கட்டுமானம், புனரமைப்புக்கு தமிழீழ விடுதலைப்புலிகளுடன் இணைந்து அரசாங்கம் பொதுக்கட்டமைப்பொன்றை ஏற்படுத்தவேண்டுமென்றும், பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்பட்டாலே புனரமைப்பு, மீள்கட்டுமானம் சிறப்பாக இடம்பெறுமென்றும், விடுதலைப்புலிகளுடன் பொதுக்கட்டமைப்பு உடன்பாட்டுக்கு இலங்கை அரசு வரத் தவறுமாயின் வெளிநாட்டு உதவிகள் எவையும் இலங்கைக்கு வழங்கப்படமாட்டாது என்றும் சர்வதேச சமூகம் இலங்கைக்கு உறுதிபடத் தெரிவித்துள்ளது.

மேலும் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் இலங்கைக்குரிய அவசியமான உதவிகள் பற்றி எதிர்வரும் 17-ம் 18-ம் திகதிகளில் கண்டியில் ஆராயவுள்ளன. இக்கூட்டத்தில் உதவிவழங்கும் நாடுகள் ஆழிப்பேரலை அனர்த்த மீள்கட்டுமான நிதியாக எவ்வளவு தொகையை வழங்குவது என தீர்மானிக்கவுள்ளன.

இந்நிலையில் உதவிவழங்கும் நாடுகள் விடுதலைப் புலிகளுடன் பொதுக்கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டாலே, கூட்டம் கண்டியில் நடைபெறும் என்று உறுதியாக கூறிவிட்டனர். இதனால் அரசாங்கத்தில் நிதிக்கனவில் மண்விழுந்து பெரும்இக்கட்டு நிலை ஏற்பட்டிருக்கிறது.

ஆனால் அரசின் பங்காளிக்கட்சியான ஜே.வி.பியும் இனவாத ஆதிக்க சக்திகளும் விடுதலைப்புலிகளுடன் பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்த அரசு முற்படக் கூடாது என்று எச்சரிக்கை செய்திருப்பதுடன் பொதுக்கட்டமைப்புக்கு எதிராக போராட்டங்களையும் முன்னெடுத்துள்ளன.

இந்நிலையில் சந்திரிகாவின் அரசு மத்தளமாக அடிபடத்தொடங்கி இருக்கிறது. பொதுக்கட்டமைப்பை உருவாக்க வேண்டும் என்பதில் சர்வதேச சமூகம் விடாப்பிடியாக அரசுக்கு அழுத்தம் கொடுக்கிறது. ஆனால் அதனை உருவாக்கக்கூடாது என்று பங்காளிக்கட்சி ஜே.வி.பி எதிர்ப்பதுடன் உருவாக்கினால் அரசுக்கான ஆதரவை விலக்கி ஆட்சியை கவிழ்ப்போம் என்றும் சூளுரைத்திருக்கின்றது.

இந்நிலையில் யாரைஎப்படி நோவது என்று தெரியாமல் அரசு திண்டாடுகிறது. மேலும் அரசுக்கு நெருக்கடி ஏற்படும் வகையில் மின்சாரசபை ஊழியர்களின் தொழிற்சங்கப்போராட்டம், எரிபொருட்களின் விலை ஏற்றமும் அத்திய அவசியப்பொருட்களின் விலை உயர்வும் பொருளாதார நெருக்கடி என பல நெருக்கடிகளுக்குள் அரசாங்கம் திணறிக்கொண்டு இருக்கிறது.

இங்குதான் சந்திரிகாவின் தூரநோக்கு அரசியல் சாணக்கியம் என்ன என்பதும் எதற்கு முதன்மை அளிக்கவேண்டும் என்ற பட்டறிவும் தெளிவுபடப்போகின்றது.

# சிவராம் கொலையை விசாரணை செய்ய சர்வதேச சுயாதீன ஆணைக்குழு வேண்டும்

## இரா சம்பந்தன் எம்.பி. வேண்டுகோள்

(கொழும்பு)

ஊடகவியலாளர் சிவராமின் படுகொலை தொடர்பான விவகாரங்களை புலன்விசாரணை செய்வதற்கு சர்வதேச சுயாதீன ஆணைக்குழு ஒன்றை அரசாங்கம் உடனடியாக உருவாக்க வேண்டும்.



அவ் ஆணைக்குழுவில் சார்க் அமைப்பில் அங்கம் வகிக்கும் இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் மற்றும் பொதுநலவாய நாடுகளான அவுஸ்திரேலியா, நியூசிலாந்து போன்றவறறின் நடுநிலையும் தகுதியும் உள்ள நபர்கள் உள்ளடக்கப்பட வேணடும் என தமிழ்த்தேசியக் கூட்டமைபபின்பாராளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் வேண்டு கோள்விடுத்துள்ளார்

ஊடகவியலாளர் டி.சிவராமின் கொலை தொடர்பாக நேற்று முன்தினம் பாராளுமன்றில் நடைபெற்ற விவாதத்தில் யோசனையொன்றினை முன்வைத்து உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

சிவராம் மீதான மிருகத்தனமான தாக்குதல், கற்பனை செய்யும் சுதந்திரம், கருத்துக்கூறும் சுதந்திரம் என்பவற்றின் மீதான தாக்குதலாகும். சிவராம் எழுதுவதை தடுப்பதே கொலையின் பின்னணியிலிருந்த நோக்கமாகும். இந்த பாசிஸ குற்றம் முற்றிலுமாக கண்டிக்கப்படத்தக்கது. இது சுதந்திர ஊடகத் துறையின் மீது செய்யப்பட்ட மிரட்டலாகும். முறையான விசாரணைகள் நடத்தப்படும் என்று அரச தரப்பில் கூறப்பட்டிருப்பவை உத்தரவாதங்களல்ல. கடந்தகாலங்களில் இவ்வாறான உறுதிமொழிகள் ஒரு போதும் நிறை வேற்றப்பட்டிருக்கவிலலை. எனவே சர்வதேச சுயாதீன விசாரணை ஆணைக்குழு அமைத்து உண்மைநிலையை வெளிப் படுத்த வேண்டும் எனத் தெரிவித்தார். (ச-4)

## ஆவணங்களை வழங்குமாறு செலூலர் நிறுவனங்களுக்கு கல்கிசை நீதிவான் உத்தரவு

கல்கிசை பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரிக்கு கேட்கும் தகவல்களை வழங்குமாறு கல்கிசை நீதிவான் இரு செலூலர் தொலைபேசி நிறுவனங்களுக்கு உத்தரவிட்டுள்ளார்.

கல்கிசை புலனாய்வுப் பிரிவு பொலிஸ் அதிகாரி ஜெயரட்ணத்தின் கடத்தல் குறித்து விசாரணை நடத்தி வரும் கல்கிசை பொலிஸார் தமக்கு குறித்த தொலைபேசி நிறுவனங்களிடமிருந்து சில விபரங்கள் தேவைப்படுவதாக தெரிவித்திருந்தனர்.

தொலைபேசி இணைப்புக்களைப் பெறுவதற்காக ஜெயரட்ணம இந்த நிறுவனங்களுக்கு வழங்கிய அடையாளப்படுத்துவதற்கான ஆணவங்களின் பிரதிகள், அவரது தொலைபேசி அழைப்புக்கள் சம்பந்தமான விபரங்கள், தகவல்கள் பற்றிய விபரஙகளை கல்கிசை குற்றத் தடுப்புப் பிரிவு அதிகாரி நுகேராவிற்கு வழங்குமாறு டயலொக் ஜி.எஸ்.எம், ஹட்சிசன் ஆகிய நிறுவனங்களுக்கு கல்கிசை நீதிவான் விகும் அத்துலகளு ஆராச்சி உத்தரவிட்டுள்ளார். (க-7)

## வாசிக்கும் பழக்கம் மனிதரை பூரணத்துவமடையச் செய்கிறது

மாந்தை கிழக்கு விசேட ஆணையாளர் தெரிவிப்பு

(முல்லைத்தீவு)

“மாநதை கிழக்குப் பிரதேசம் சகல துறைகளிலும் பின்தங்கிய ஒரு பிரதேசமாகக் கருதப்படுகின்றது. இவ்வடிப்படையில் மாணவர்களின் கல்வித்தரத்தை மேம்படுத்த பொது நூலகத்துக்கு பெருந்தொகை செலவில் புத்தகங்களை வாங்குகின்றோம்.

அவைகளையெல்லாம் மாணவர்களும், பொதுமக்களும், நன்கு பயன்படுத்தினால் இப் பிரதேசத்தின் ஒரு சிறந்த பிரசையாக உருவாகலாம். அப்போதுதான் நாட்டுக்கும், வீட்டுக்கும் சிறந்த சேவையாற்ற முடியும்”.

மாநதை கிழக்குப் பிரதேச சபையின் பொது நூலக ஆலோசனைக் குழுக்கூட்டத்தில கலந்துகொண்ட மாந்தை கிழக்கு பிரதேச சபையின் விசேட ஆணையாளர் திருமதி.சாந்தி ஸ்ரீஸ்கந்தராசா இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் ஒரு மனிதன் பூரணத்துவம அடைய வேண்டுமானால் வாசிக்கும் பழக்கம் ஊக்குவிக்கப்பட வேண்டும். இன்றைய வாழ்க்கைச் செலவு அதிகரிப்பில் ஒரு புத்தகம் வாங்குவதென்பதே சாதாரண ஒருவரால் முடியாத ஒரு காரியம். அதனாலேயேதான் அரசாங்கம் உள்ளூராட்சி அமைச்சு மூலம் பிரதேசசபைகள் மூலமாக பொது நூலகங்களை உருவாக்கி அவற்றுக்கு பெருந்தொகை பணத்துக்குப் புத்தகங்களை வாங்க அனுமதி வழங்கியுள்ளது.

பாடசாலை மாணவர்களுக்கு பொருத்தமான புத்தகங்களை அவாகளின் தேவை அறிநது கொள்வனவு செய்வதற்காகவே தான இப்பிரதேசக் கல்வி மாண்களைக் கொண்டு நூலக ஆலோசனைச்சபை ஒன்றை உருவாக்கியுள்ளோம். இந்த ஆலோசனைச் சபையின் பரிந்துரைகளையும் கருத்திற் கொண்டே புத்தகங்களை வாங்கி வருகிறோம். அவற்றை வாங்கி வெறுமனே காட்சிப் பொருளாக அடக்கிவைத்தால் போதாது அவை பயன்படுத்தப்பட்டால் தான் எமது திட்டம் வெற்றியடைந்ததாகக் கருதப்படும்.

அக்கூட்டத்தின்போது ஒன்பது பேர் கொண்ட நூலக ஆலோசனைசசபை ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது. பாண்டியன்குள மகாவித்தியாலய அதிபர் கி.கிருஷ்ணானந்தன் தலைவராகவும், எல். இராமசசந்திரன் கிராமசேவையாளர், சுவாம்பிள்ளை முடியப்பு சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர், நூலக உதவியாளர் சுந்தரமூர்த்தி ஆசிரியர்களான மதுரநாயகம், திருமதி ர.சிவலிங்கம, இ.சுசிலா மாணவர்கள் சார்பில் இ.கருணாகரன் தெ.பத்மரேபா ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டார்கள். (து-128)

## வசமாகச் சிக்கிய ஓட்டோத் திருடன்

(சாவகச்சேரி)

மீசாலையிலிருந்து கடத்திச் செல்லப்பட்ட ஓட்டோ, பருத்தித்துறையில் வைத்து விலை பேசப்பட்டபோது மடக்கிப் பிடிக்கபபட்டது.

சரசாலையைச் சேர்ந்த எஸ். சுகிர்தன் என்பவருக்குச் சொந்தமான ஓட்டோ கடந்த செவ்வாய்க்கிழமை சாவகச்சேரி வடக்கு மீசாலைப் பகுதியில் வைத்துக் கடத்தப்பட்டது.

இரவு 8.00 மணியளவில் ஓட்டோ உரிமையாளர் ஓட்டோவை வீடொன்றின் முன்பாக நிறுத்திவிட்டு சில நிமிடங்கள் கழித்து வந்து பார்த்த போது ஓட்டோ கடத்தப்பட்டிருந்தது.

இந்நிலையில் மறுநாள் புதன்கிழமை ஓட்டோவைக் கடத்திய திருடன பருத்தித்துறையில் வைத்து ஓட்டோவை அறுபதாயிரம் ரூபாவுக்கு விலைபேசி விற்க முயற்சித்தான்.

ஆனால் ஓட்டோவின் இலக்கமும், பதிவுப் புத்தகத்தில் உள்ள இலக்கமும் வேறுபட்டு இருந்ததால் ஓட்டோவை வாங்க முற்பட்டவருக்கும் ஓட்டோவைக் கடத்திய திருடனுக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது.அந்நேரத்தில் மீசாலையைச் சேர்ந்த இன்னொரு ஆட்டோக்காரர் அவ்விடத்துக்கு வரவே கடத்தல் விவகாரம் அம்பலத்துக்கு வந்தது.

அதிலிருந்து தப்பிக்க நினைத்த ஓட்டோத் திருடன் ஓட்டோவுடன வேகமாகச் செல்ல முற்பட்டபோது, ஓட்டோ தடம் புரண்டது. விடயமறிந்த பொது மக்கள் ஓட்டோவைக் கடத்திய திருடனையும் ஓட்டோவையும் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். (க-21)

## அமைதி காக்கும் படையாக ஹெயிட்டி சென்ற வீரர்கள் நாடு திரும்பினர்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் அமைதி காக்கும் படையில் இணைந்து சேவையாற்றுவதற்காக ஹெயிட்டி சென்ற இலங்கை இராணுவததின் ஒரு குழுவினர் நேற்று முன்தினம் நாடு திரும்பினர். ஹெயிட்டி நோக்கிச் சென்ற 850 வீரர்களுள் 375 பேர் நேற்று முன்தினம் இங்கு வந்தடைந்ததாக இராணுவ தலைமையகம் தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் அமைப்பிற்கு சொந்தமான விமான மூலம் இவர்கள் இலங்கை வந்தடைந்தனர்.

இவர்களை இராணுவத்தின் உயரதிகாரிகள் விமான நிலையத்திற்கு சென்று வரவேற்றனர்.

இதேவேளை ஹெயிட்டியில் தங்கியுள்ள இலங்கை இராணுவத்தின் முதலாவது குழுவினர் மேலும் சில வாரத்தில் இலங்கை வரவுள்ளதாக இராணுவத் தலைமையகம் தெரிவித்துள்ளது.(ற-9)

## வீடுகளை அமைக்கவில்லை பாதிப்புற்ற மக்கள் கவலை

(திருநெல்வேலி)

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அமைத்துக் கொடுக்கபபட்டுவரும் தற்காலிக வீட்டுத்திட்டங்களில் “சேவாலங்கா” நிறுவனம் மாமுனைப் பகுதியில் ஏற்கனவே வாக்களித்ததற்கிணஙக ஒரு தொகுதி வீடுகளை அமைக்கவில்லை என பாதிக்கபபட்ட மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

ஒரு மாதத்திற்கு முன்னர் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான அரை நிரந்தர வீடுகளை அரைகுறையுடன் அமைத்துக் கொடுதத சேவாலங்கா நிறுவனம் மேலும் பாதிக்கப்பட்ட மக்களில் ஒரு தொகுதியினருக்கு வீடுகளைக் கட்டிக்கொடுப்பதாக வாக்குறுதி அளித்த போதிலும் ஒரு மாதம் கடந்தும் மிகுதி வீடுகளை அமைக்கும் பணி இதுவரை ஆரம்பிக்கப்படவில்லை எனப் பாதிக்கப்பட்டமக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.(க-43)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

என்றாவது புலன்கள் லட்சியமாக இருக்க முடி யுமா? சுகபோகங்களை நுகர்வது லட்சியமாக இருக்க முடியுமா? என்றாவது இந்த வாழ்க்கை ஆன்மாவின் லட்சியமாக இருக்கமுடியுமா? அப்படியானால் இந்தக் கணமே சாவது நல்லது. இந்த வாழ்க்கை வேண்டாம்! இதுதான் மனிதனின் விதியானால், அதாவது அவன் ஒரு பூரண எந்திரமாகத்தான் இருக்கப் போகிறான் என்றால் நாம மீண்டும் மரங்களாகவும் கற்களாக்வும் போக வேண்டியதுதான்.

சுவாமி விவேகானந்தர்

## மின் ஊழியர் சங்கம்....

தந்திரமான செயற்பாடுகள் காரணமாகவுமே சுமுகமானதீர்வு காணப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

இலங்கை மின்சாரசபையை 9பிரிவுகளாக பிரிக்கும் நடவடிக்கைகளுக்காக அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்ட சர்ச்சைக்குரிய ஆவணம் மீளப்பெற நேற்றைய பேச்சுவார்த்தைகளின் போது தீர்மானிக்கப்பட்டது.

இதுதவிர புதிய சட்டக்கோவை ஒன்றினை உருவாக்கவும் முடிபு காணப்பட்டது. இந்தப்பேச்சுவார்த்தைகள் பிரதமர் மகிந்தவின் தலைமையில் இடம்பெற்ற அதே வேளை மின்சார எரிபொருள் அமைச்சர் சுசில் பறேம்ஜெயந்த, சுகாதார அமைச்சர் நிமால் சிறிபால டிசில்வா ஆகியோரும் கலந்துகொண்டனர். (இ-4)


# மே 7 முதல்

பாடநூல் வெளியீட்டிலும் நாடளாவிய விற்பனை மேம்படுத்தலிலும் கொழும்பில் முன்னணி வகிக்கும் லங்கா புத்தகசாலை அனுசரணையுடன்

யாழ். பல்கலைக்கழக வணிக மாணவர் மன்றத்தின்

## மாபெரும் புத்தகக் கண்காட்சியும் மலிவு விற்பனையும்

அனைத்துத் தரப்பினருக்கும் ஏற்ற உள்நாட்டு வெளிநாட்டு (ஆங்கில, தமிழ்) பாடநூல்களும், அகராதிகள், கவிதைகள், சிறுகதைகள், சமய இலக்கியங்கள், மருத்துவ நூல்கள் மற்றும் பல

இடம் : யாழ். பல்கலைக்கழக வணிகத்துறை விரிவுரை மண்டபம்
காலம் : 2005 மே மாதம் 7 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதி வரை
நேரம் : காலை 9.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை (புதியநேரம்)
(வார இறுதி நாட்களும், விடுமுறை நாட்களும் உட்பட)

சிறப்பு விலைக்கழிவு

தொடர்புகளுக்கு
தலைவர், வணிக மாணவர் மன்றம்,
யாழ். பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்
(C-1354)

மனோகரா யாழ்.
06.05.2005 முதல்
சரத்குமார், ரமேஷ், பூஜா மற்றும் பலர் நடித்த



ஜித்தன்
கா.நேரம்: 9.30, 2.30, 6.30, 9.30
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு

நிறைஞ்சனாஸ் சங்கானை
விஜய், சங்கவி
ஜெய்சங்கர், செந்தில்
நடித்த



விஸ்னு
கா.நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே)

நாதன்ஸ் சினிமா
குளிரூட்டப்பட்டது யாழ்ப்பாணம்
02.05.2005 முதல்
ஜெய்ஆகாஷ், ராஜ்கிரண், மிஷா, செந்தில், ராதாரவி நடித்த



செவ்வேல்
கா.நே: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)


## புலிகளின் விமானம் குறித்து.....

வனவு செய்யவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. ஒஸ்லோ அனுசரணையுடனான போர்நிறுத்தம் அமுலிலுள்ள வேளையில் புலிகள் விமானங்களைக் கொள்வனவு செய்தது பற்றி இலங்கை அரசாங்கம் அயல்நாடுகளிடம் அப்போது கவலை தெரிவித்திருந்தது.

வடபகுதியில் உள்ள இரணைமடுவில் புலிகள் ஓடுபாதையை அமைத்துள்ளார்கள் என்ற தகவல் எம்மிடம் உள்ளன. இரண்டு விமானங்களை புலிகள் கொள்வனவு செய்துள்ளார்கள். இது போர்நிறுத்த உடன்பாட்டை மீறும் செயலாக உள்ளதுடன், நாட்டின் தேசிய பாதுகாப்பிற்கும் குந்தகம் விளைவிக்கும் என்றும் இலங்கை அரசாங்கம் தெரிவித்திருக்கிறது.

2003 ஆம் ஆண்டு ஒக்டோபரில் இலங்கை இந்தியாவுடன் பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திடும் முயற்சிகளில் ஈடுபட்டது. எனினும் இறுதி உடன்படிக்கை எட்டப்படவில்லை.

1998 இல் இலங்கை - இந்தியா வர்த்தக உடன்படிக்கையில் கைச்சாத்திட்டனரென நட்வர்சிங் மேலும் தெரிவித்தார். (இ-04, 06)


# Jaffna College Institute of Technology
Vaddukoddai

**Certificate in Vocational Masonry & Carpentry**
(மரவேலை, கட்டடவேலை பயிற்சிநெறிகள் உள்ளடக்கியது)

Swiss Agency for Development and Co-operation உதவியுடன் இலவச பயிற்சி நெறிகள் ஆரம்பமாகவுள்ளது.

காலம்: 6 மாதங்கள்

ஒழுங்கான பயலுனருக்கு ஊக்குவிப்புப் பணம் வழங்கப்படும்.
ஆர்வமுள்ள ஆண்/பெண் விண்ணப்பதாரிகள் நேரில் வந்து யாழ்ப்பாணக் கல்லூரி தொழில்நுட்ப நிறுவனம், வட்டுக்கோட்டை காரியாலயத்தில் விண்ணப்பப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளவும்

விண்ணப்ப முடிவு திகதி: 12.05.2005

Director,
Jaffna College Institute of Technology
Vaddukoddai

# JAFFNA CELLULAR
## MOBITAL - G.S.M

11 500/=



11 500/=



மேசைத் தொலைபேசிகள்
இணைப்புக்களுடன் விற்பனைக்குண்டு

கையடக்கத் தொலைபேசி களுக்கான உதிரிப்பாகங்களை பெற்றுக்கொள்ளவும்

திருத்த வேலைகளை உடன் செய்து கொள்ளவும்

குறிப்பு: கையடக்கத் தொலைபேசிகள் லொக் உடைத்து கொடுக்கப்படும்

மேலதிக விபரங்களுக்கு:
JAFFNA CELLULAR
151, 1/4 மின்சாரநிலைய வீதி
யாழ்ப்பாணம்
T.P: 0777 738888,
0777209175, 0712504340



# COOL AIR'S
## GALANZ AIR CONDITIONERS (SPILT TYPE)

Galanz

- தொலைத்தொடர்பு நிலையங்கள்
- வர்த்தக நிலையங்கள்
- கணனி நிறுவனங்கள்
- காட்சி அறைகள்
- வீடுகள்





இவைகளுக்கேற்ற குளிரூட்டிகள்

எமது சேவைகள்

ISO 9001 தரச் சான்றதழ் பெறப்பட்டது

- ✓ பொருத்துதல் இலவசம்
- ✓ மூன்றுவருட உத்தரவாதம் (Compressor 3 years, Body 1 year)
- ✓ விற்பனைக்கு பிந்தியசேவை
- ✓ மூன்று மாதத்திற்கு ஒருமுறை H.F.C வாயு பயிற்சிபெற்ற (U.N.E.P), (N.O.U) United Nations Environment Programme, National Ozone Unit தொழில்நுட்பவியலாளர்களால் குளிரூட்டிகள் பரிசீலனை செய்யப்படும்.

| வகை | விலை |
|---|---|
| 9000 BTU | 43, 500/= |
| 12000 BTU | 53, 500/= |
| 18000 BTU | 68, 500/= |
| 24000 BTU | 88, 500/= |

மேலதிக விபரங்களுக்கு:
COOL AIR'S
இல. 151 1/4, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.

T.P: 0777 738888, 0713 080808

EXPOAIR
your friend in the skies...



யாழ் – கொழும்பு
விமான பயணத்திற்கு அழையுங்கள்:
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891/6297, 0772 2349999/8888
கொழும்பில் - 011 2372952/3, வெள்ளவத்தையில் - 011 2360290/91
Email- jaffna@expoavi.com, reservations@expoavi.com

எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பன்...




இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல. 15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.05.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.